செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு ௪௬ | திருவள்ளுவர் ஆண்டு உ00௩, தை
பிப்ரவரி 1972 | பரல் ௫

# இந்திய அலுவலக நூலகம்*

இந்திய மக்களின் வரலாறு, பண்பாடு, மொழி பற்றி வெளிவந்துள்ள அரிய நூல்களைத் தொகுக்க வேண்டுமென்று வெள்ளையர்களால் இலண்டனில் தோற்றுவிக்கப்பெற்ற நூலகம்தான் இந்திய அலுவலக நூலகம். இந்து சமயத்தைத் தழுவிய இந்தியா வேற்று மதத்தினரான முசுலிம் மன்னர்களால் ஆளப்பெற்றதால் தங்கள் பழம்பெரும் மொழிகளில் தோன்றிய இலக்கியங்களையும் வரலாறுகளையும் இழந்து தவிப்பதை வெள்ளையர் இந்நாட்டை ஆளத் தொடங்கிய போது உணர்ந்தனர். ஏனெனில் அவர்கள் கண்முன்னரேயே முகமதியர் தம் ஆட்சிக் காலத்தில் போற்றிப் பாதுகாத்து வந்த பெர்சிய, அராபிய இலக்கியங்கள் போற்றுவாரற்றுக் கிடந்ததைக் கண்டனர். இந்நிலை நீடித்தால் இம்மொழி நூல்கள் விரைவில் அழிந்து போய்விடும் என்று அஞ்சினர். அதன் பொருட்டுக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த இயக்குநர்கள் தம் கீழ் இந்தியாவில் பணியாற்றிவந்த உயர்நிலை அதிகாரிகளுக்குச் சுற்றறிக்கை யொன்றை 1798 மே 25 இல் அனுப்பினர்.

"இங்கிருந்து அவ்வப்போது அனுப்பப்பெறும் சுற்றறிக்கைகளிலிருந்து நாங்கள் இந்திய இலக்கியத்தை ஊக்குவிக்க விரும்புகிறோம் என்பதை நீங்கள் அறிந்திருக்கலாம். அங்கு வந்து பணியாற்றிவிட்டு இவ்வூர் திரும்பிய நம் அதிகாரிகள் சிலர் சிறந்த ஏடுகளையும் நூல்களையுந் தொகுத்து

* India Office Library, London.

இங்கே கொண்டு வந்துள்ளார்கள். இவ்வாறு தனிப்பட்டவர் களிடமிருந்து அந்நூல்கள் பிறர் கைகளுக்குச் சென்று கவனிப் பாரற்றுப் போகின்றன. இறுதியாக அவை ஐரோப்பாவிற்கோ அல்லது இந்தியாவிற்கோ எந்நாட்டுக்கும் பயன்படாது போகின்றன. எனவே நாமே அவற்றைத் தொகுத்துப் பாது காக்க எண்ணியுள்ளோம். நம் கம்பெனி இயங்கி வரும் இந்திய மனை (India House)யில் ஒரு பகுதியை இந்திய நூல் களுக்காக ஒதுக்க விரும்புகிறோம். அதனால் பாரசீகம், அரபு, சமக்கிருதம் போன்ற மொழிகளிலும் பிற இந்திய மொழி களிலும் வெளிவந்துள்ள பல அரிய நூல்களைத் தேடித் தொகுத்து அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.''

இச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டவாறே கிழக்கிந்தியக் கும்பெனியாரால் லண்டன் லீடன் ஹால் தெருவிலுள்ள கிழக்கிந்திய மனையில் 1798 இல் ' இந்திய அலுவலக நூலகம் ' தொடங்கப் பெற்றது. சர் சார்லசு வில்கின்ஸ் அதன் முதல் நூலகராக 1801 ஆம் ஆண்டில் பொறுப்பேற்றார்.

இந்திய வரலாறு, தொல்பொருள், தத்துவம், சமயம், மொழியியல், மானிடஇயல், பொருளியல், அரசியல், இலக்கியம் போன்ற பலதுறைகளில் இந் நூலகத்திற்கு இந்தியாவி லிருந்தும் பிற கீழை நாடுகளிலிருந்தும் பல அரிய நூல்கள் அனுப்பப்பெற்றன.

இராபர்ட் ஓர்ம் (Ropert Orme) என்ற வரலாற்றறிஞர் இந் நூலகம் ஏற்படும் திட்டத்திற்குப் பெரிதும் காரணமா யிருந்தவர். அவர் கீழை நாட்டு வரலாற்றை எழுதுவதற் காகச் சேர்த்து வைத்திருந்த நூல்கள் இந் நூலகத்திற்கு அன்பளிப்பாகக் கிடைத்தன.

அடுத்தாற்போல 1799 இல் மைசூரில் மறைவுற்ற திப்புசுல்தானின் நூலகத்தில் ஈராயிரம் ஏடுகள் இந் நூலகத் திற்குக் கிடைத்தன. அவ்வேடுகளில் பல இந்திய மொழி களிலும் அரபு, பாரசீக மொழிகளிலும் எழுதப்பட்டவை.

1831 இல் மகாலேயின் புதிய பாடத்திட்டம் நடை முறைக்கு வந்தபின் கல்கத்தா வில்லியம் கோட்டைக் கல்லூரி (Fort william college) யிலிருந்து பெரும் பகுதியான ஏடுகளும் நூல்களும் இந்திய அலுவலக நூலகத்திற்கு அனுப்பிவைக்கப் பெற்றன.

அதிலிருந்து ஆண்டுதோறும் புதிய நூல்களும் ஏடுகளும் நூலகத்திற்கு அன்பளிப்பாகவும் விலைக்கு வாங்கியும் சேர்க்கப் பெற்றன.

1857 இல் ஏற்பட்ட சிப்பாய்க் கலகத்தின் விளைவாக முகமதியச் சிற்றரசுகளிடமிருந்தும் நவாபுகளிடமிருந்தும் பல நூலகங்கள் அப்படியே லண்டனுக்கு எடுத்துச் செல்லப் பெற்று இந்திய அலுவலக நூலகத்தில் இணைக்கப் பெற்றன.

மேதகு ராணியார் இந்தியாவை ஆளும் பொறுப்பைக் கிழக்கிந்தியக் கும்பெனியாரிடமிருந்து 1858 இல் ஏற்றுக் கொண்டபோது இந் நூலகம் இந்திய அரசாங்கத்திற்கே உரிமையாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

1867 இல் இரு முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நூலகம் லண்டன் மாநகரின் மத்தியப் பகுதியிலுள்ள கிங் சார்லசு தெரு வெண்மண்டபத்திற்கு மாற்றப்பட்டது. புதிய இடம் பிக் பென் மணிப்பொறிக்கும் பாராளுமன்றக் கட்டிடத்திற்கும் அருகிலிருந்தது.

அதே ஆண்டில்தான் இந்திய அச்சக, புத்தகப் பதிவுச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி இந்தியாவில் அச்சான ஒவ்வொரு நூலிலும் ஒரு படி சட்டப்படி இந் நூலகத் திற்கு அனுப்பி வைகக வேண்டுமெனக் கொண்டு வரப்பட்டது. இதனால் இந்திய மொழி நூல்கள் தங்குதடையின்றி இந்திய அலுவலக நூலகத்திற்குக் கிடைக்கலாயின. இந்தியா அல்லது வேறு நாடுகளில் இந்தியாவைப் பற்றி வெளியான நூல்களும் வாங்கப்பெற்றன.

இம்முறை 1947இல் இந்தியா விடுதலை யடையும் வரை நடை முறையில் இருந்தது. விடுதலைக்குப்பின் காமன்வெல்த் உறவுக்குழுவின் செயலாளர் பொறுப்பில் நூலகம் இயங்கத் தொடங்கியது. தனக்குக் கிடைக்கும் வருவாயைக்கொண்டு இப்பொழுது வேண்டிய நூல்களை இந் நூலகம் வாங்கிக் கொள்கிறது. இவை தவிர நன்கொடையாகவும் மாற்றாகவும் பல நூல்களைப் பெறுகிறது.

நூறு ஆண்டுகள் வெண்மண்டபத்தில் நிலை பெற்றிருந்த இந்திய அலுவலக நூலகம் 1967இல் இதற்கெனப் புதிதாகக் கட்டப்பெற்ற 12 மாடிக் கட்டிடத்தில் குடி புகுந்தது. இதன்

தற்போதைய முகவரி இந்திய அலுவலக நூலகம், ஆர்பிட் மனே, 197 பிளேக் பிரெய்ர்ஸ் வீதி, லண்டன்.

இந் நூலகம் படிப்படியாக உயர்வதற்குப் பெரிதும் துணை யாக இருந்தவர்கள் இதன் தலை சிறந்த நூலகர்களே யாகும். அவர்கள் நூலக ஆட்சியில் மட்டுமன்றி இந்தியாவைப் பற்றிய ஆராய்ச்சியிலும் சிறந்து விளங்கினர்கள்.

முதல் நூலகரான சர் சார்லசு வில்கின்ஸ் சமக் கிருதத்தில் சிறந்த அறிவு பெற்று விளங்கினர். 'பகவத்கீதை' 'இதோபதேசம்' 'சகுந்தலை' ஆகியவற்றை வடமொழியி லிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். 36 ஆண்டுகள் பணியாற்றியபின் அவர் 1836இல் மறைந்தார்.

அவரை யடுத்துப் பணியேற்றவர் முதல் சமக்கிருத—ஆங்கில அகராதியை 1819இல் வெளியிட்ட எச். எச். வில்சன் ஆவார். அவரைத் தொடர்ந்து எழுவர் அப்பணியில் இருந் தனர். தற்பொழுது திரு எஸ். ஸி. சட்டன் என்பவர் நூலக ராகப் பணி புரிகின்றார்.

மிக அண்மையில் எடுக்கப்பெற்ற கணிப்பின்படி இந் நூலகத்தில் 3.50,000 நூல்கள் உள்ளன. 20,000 கீழ்க்கலை ஏடுகளும் 20,000 ஐரோப்பிய மொழி ஏடுகளும் உள்ளன. இவையன்றி 10,000 பிரிட்டிசு ஓவியங்களும் 5,000 இந்திய ஓவியங்களும் இந் நூலகத்தின் அருஞ் செல்வத்துள் அடங்கும்.

1952இல் எடுத்த கணக்குப்படி இந் நூலகத்திலுள்ள அச்சிட்ட நூல்கள் வருமாறு. (இந்திய மொழிகள் மட்டும்).

| | |
|---|---|
| அசாமியம் | 730 |
| வங்காளம் | 24,000 |
| குசராத்தி | 10,000 |
| இந்தி | 23,000 |
| கன்னடம் | 3,000 |
| காசுமீரம் | 120 |
| மலையாளம் | 2,500 |
| மராத்தி | 9,500 |
| ஒரியா | 4,000 |

| | |
|---|---|
| பஞ்சாபி | 6,000 |
| சமக்கிருதம் பிராக்கிருதம் | 24,000 |
| தமிழ் | 15,500 |
| தெலுங்கு | 6,500 |
| உருது | 19,000 |

இவையன்றிச் சீனம், அராபியம், பாலி, பாரசீகம், பர்மீயம் முதலிய மொழிகளிலும் நூல்கள் உள்ளன.

1952க்கு முன் பதினையாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் நூல்கள் இந்நூலகத்தில் இடம்பெற்றிருப்பது பெருவியப்புக்குரிய செய்தியாகும். தமிழ்நாட்டிலேயே இன்றுகூட இவ்வளவு நூல்களைக்கொண்ட நூலகம் இருக்கிறதா என்பது ஐயம்தான். தமிழ் விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ள இன்றைய நாளில்கூட இத்தனை நூல்களையும் தமிழ்நாட்டின் மூலைமுடுக்குகளிலிருந்து ஒன்று திரட்டாமல் விட்டுவிடுவோமானால் எதிர்காலத்தில் என்றுமே இயலாது போய்விடும்.

இந்நூலகத்திலுள்ள தமிழ்நூல்களுக்கு இதுவரை அச்சிட்ட பட்டியல் ஏதும் வெளியிடப்பெறவில்லை. இந்நூல்களைத் தமிழ்நாட்டிற்குக் கொணர்வதில் பல சிக்கல்கள் இருப்பினும் இவற்றைப்பற்றிய நூல் விவரணப் பட்டியல் ஒன்றையாவது தக்க வல்லுநர்களைக்கொண்டு இன்றைய தமிழக அரசு வெளிக்கொணர முயலவேண்டும்.

அரும்பெரும் அறிவுச் செல்வங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள இந்திய அலுவலக நூலகம் யாருக்கு உரியது என்று இந்தியா விடுதலையடைந்தபோது எழுதிவைக்கப் பெறவில்லை. அதனால் அதை அடைவதற்குரிய உரிமைப் போராட்டம் இப்பொழுது நடைபெற்று வருகின்றது. முதலில் பிரித்தானியப் பேரரசும் இந்திய அரசுமே போரிட்டன. மூன்றாவதாகப் பாகிஸ்தானும் போரில் கலந்துகொண்டு தனக்கும் அதில் உரிமை உண்டு என்று கூறி வருகிறது. அண்மையில் தோன்றிய 'வங்க தேசமும்' இனி அதற்கு உரிமை கொண்டாடலாம். ஏனெனில் இந்நூலகம் இந்தியா பிரிவினை ஆகாதபோது உருவாக்கப்பட்ட ஒன்றாகும்.

பிரிட்டன் தான் உரிமை கொண்டாடுவதற்குக் கூறும் மூன்று காரணங்கள்: 1. இந்நூலகம் பெரும்பாலும் கிழக்

கிந்தியக் கும்பெனி அதிகாரிகளின் நன்கொடைகளால் உருவாக்கப்பட்டது. 2. கிழக்கிந்தியக் கும்பெனியின் வரலாற்றையும் பிரித்தானியப் பேரரசின் வரலாற்றையும் எழுதுவதற்கு இந் நூலகத்திலுள்ளவை மிகமிக இன்றியமையாதன. 3. 1935ஆம் ஆண்டு இந்தியச் சட்டத்தின்படி இந்நூலகம் பிரிட்டனின் சொத்தாகும்.

இந்தியா எழுப்பும் உரிமைக்குரலுக்கு அடிப்படைக் காரணங்கள்: 1. நூலகத்திலுள்ள பெரும்பாலான நூல்களை வாங்குவதற்காகச் செலவிடப்பட்ட இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட தொகையும் 1864இல் நூலகத்தின் புதிய கட்டிடத்தைக் கட்டுவதற்காகச் செலவிடப்பட்ட 12 இலட்சத்திற்கு மேற்பட்ட தொகையும் இந்தியாவிலிருந்து வந்த வருமானத்திலிருந்துதான் எடுக்கப்பெற்றுள்ளது. 2. இந்நூலகத்திலுள்ள நூல்கள் அனைத்துமே இந்தியாவைப் பற்றிய நூல்கள்தாம். அதனால் இந்திய வரலாற்றை எழுதுவதற்கு இவை மிகமிக இன்றியமையாதவையாகும். 3. இந்நூலகம் சட்டப்படி பிரிட்டனுக்கு உரிமை என்பதைவிட அரசியல் சூழ்நிலை காரணமாகவே அதற்கு உரிமையாக்கப்பட்டது. அதனால் பேச்சுமூலம் உரிமையை மாற்றிக்கொள்ளலாம்.

இவ்வாறு 1947இலிருந்து இந்தியாவிற்கும் பிரிட்டனுக்கும் பேச்சு மாற்றம் நடைபெற்று வருகின்றதே தவிர இந்நாள்வரை முடிவேதும் கிட்டவில்லை. உரிமைபற்றி இவ்வழக்கு இருப்பினும்கூட இலண்டன் செல்லும் இந்திய அறிஞர்களுக்கும் பிறருக்கும் உதவி செய்வதில் இந்நூலகம் தயக்கம் ஏதும் காட்டுவதில்லை. இந்தியாவைப்பற்றி ஆராய்ச்சி செய்யும் உலக நாடுகளின் அறிஞர்கள் அனைவரும் இந் நூலகத்தைப் பயன்படுத்திப் பலனடைகின்றனர்.

—இரா. முத்துக்குமாரசாமி

---

## நூற்பயன்

ஒரு பூண்டின் வாழ்வுக்கால முழுவளர்ச்சியின் பயனை ஒரு சிறு புட்டி நன்மருந்து நமக்கு வேண்டும்போது தரக் காத்திருப்பதுபோல, ஒரு சிறந்த அறிஞன் முழுவாழ்வின் பயனை ஒரு நூல் நமக்கு வேண்டும் போது தரக் காத்துக்கொண்டிருக்கிறது.

—மில்டன்.

# இறைமையில் இசைந்த வாழ்வு

## இறைமையின் முறைமை

## 12

(சிலம்பு-சசு. பரல்-ச. உஉசஆம் பக்கத் தொடர்ச்சி)

[திரு. மா. சண்முகசுப்பிரமணியம்]

### இயற்கையோடு இயைந்த இன்ப துன்பம்

அடர்ந்த காடு. உச்சிவேளையிலும் ஒளி புகாதபடி பச்சைப்பந்தலை விரித்து நிற்கும் ஓங்கி வளர்ந்த மரங்கள், விதவிதமான செடி கொடிகள், விந்தை நிறப் பூக்கள், காற்றிலே கலந்து நிற்கும் பசுமை மணம்—இவை இயற்கையின் செழிப்பைக் கொழிக்கின்றன. முரலும் வண்டினத்தின் ஓயாத 'ரீங்காரம்'. இடையிடையே அவ்வொலியைக் கிழித்துக் கொண்டு கீச்சிடும் பறவைக் குரல்கள். நம் கண்ணுக்கும் காதுக்கும் விருந்தாக உள்ளது அந்த இயற்கைக் காட்சி.

அந்த இருண்ட காட்டிலே ஓர் இடைவெளி. தெள்ளிய நீரோட்டம் அங்குத் தேங்கி நிற்கிறது. உச்சி ஞாயிற்றின் ஒளிக்கதிர்கள் அந்த நறுந்தடாக நீரிலே நடம் புரிகின்றன. அதோ ஒரு மான் கூட்டம். எவ்வளவு ஆர்வத்தோடு வந்து, தடாகநீர் பருகித் தாகத்தைத் தீர்த்துக்கொள்ளுகின்றன. நெடுங்கண் மான்கணத்தின் பார்வையில்தான் எத்தகைய மருட்சி! சின்னஞ்சிறு மான்குட்டி ஒன்று தன் அன்னையின் அடிவயிற்றை அண்டி நிற்கிறது. தலையினைச் சாய்த்துத் தன் குட்டியை அணைத்துக்கொள்ளுகிறது, தாய்.

இயற்கையின் எழிலார்ந்த பின்னணியிலே, தீஞ்சுவை நீரருந்தி, தீதறியா மான்கணங்கள் அன்போடு அணைந்து நிற்கும் காட்சி நம் இதயத்தை இளகச் செய்கின்றது. இயற்கையின் அழகுக் காட்சி, அதில் மலரும் அன்புக் காட்சி! அழகும் அன்பும் இயற்கையோடு இணைந்த இனிய பண்புகளாய்த் திகழ்கின்றன. நம்மை மறந்து இயற்கையோடு நாமும் இணைந்து நிற்கிறோம்.

திடீரென்று இடியொலி போன்ற உறுமல்! மின்னல் வேகத்தில் ஏதோ ஒன்று பாய்கின்றது! மான்கணங்கள் மாயமாய் மறைந்துவிட்டன! ஆனால், அதோ அங்கு நிற்கும் சிறுத்தையின் வாயிலே சிக்கித் தவித்துக்கொண்டிருக்கிறது, சில வினாடிகளுக்கு முன் தன் தாயின் அரவணைப்பில் அண்டி

நின்ற மான்குட்டி! சிறிது நேரத்திற்குள் சிறுத்தையின் கோரப்பற்கள் குட்டிமானின் துடிப்பை அடக்கிவிட்டன. இரையினை வாயில் கௌவிக்கொண்டு அச்சிறுத்தை எக்காள நடைபோட்டு இருண்ட காட்டிற்குள் சென்று மறைந்து விட்டது.

சிறுத்தையின் கொடூரச்செயல் நம் சிந்தையைக் கலக்கு கிறது. இயற்கையின் அழகும் அதிலமைந்த அன்பும் நம் மனத்தைவிட்டு மறைந்துவிட்டன. சிறுத்தையின் பற்களிலே சிக்கித் தவித்த மான்குட்டியின் மரணத்துடிப்பே நம் மனக்கண் முன் நிற்கின்றது.

தன் இரையை அடித்துக்கொன்ற சிறுத்தை புதரினுள் பதுங்கிப் படுத்துத் தனது பசியை ஆற்றிக்கொண்டிருக் கின்றது. உணவுண்ணும் இன்பத்தினைச் சிறுத்தையின் முகத்திலே காணுகின்றோம். ஆம். புல்லையும் இலையையும் தின்று வாழ இயலுமா சிறுத்தையால்? எதையாவது கொன்று தானே அஃது இரை யுண்ணவேண்டி யிருக்கிறது. இயற்கை அதனைப் படைத்திருப்பது அப்படித்தானே?

"என்ன? ஒன்றைக் கொன்று தின்று மற்றொன்று உயிர் வாழ்வதா? ஒன்றின் மரணத்திலா மற்றொன்றின் உயிர் வாழ்க்கை? ஓர் உயிரின் துன்பத்திலா மற்றோர் உயிரின் இன்பம்?"—இவ்வினாக்கள் எழுகின்றன நம் மனத்திலே.

இயற்கையின் இன்பத்தோடு எத்தகைய துன்பமும் கலந்திருக்கிறது!

இந்நினைவிலே உழலுகின்றது, நம் உள்ளம்.

* * *

தனது அகன்ற வாயைத் திறந்தவாறே குளத்து நீரினுள் மிதந்துகொண்டிருக்கிறது, ஒரு தவளை. புழுப் பூச்சிகளைத் தன் நீண்ட நாக்கால் எளிதாக வளைத்துப் பிடித்து அது விழுங்குகிறது. தவளைக்கு வேண்டிய உணவினை எளிதாகக் கிடைக்குமாறு இயற்கை வைத்திருக்கிறது? சரேலென்று ஒரு பாய்ச்சல்! அடுத்த கணம் நீர்ப்பாம்பு ஒன்றின் வாயிலே அகப்பட்டுக்கொள்ளுகிறது, அத்தவளை! நீர்ப்பாம்புக்குத்தான் அக்குளத்தில் வேறு என்ன உணவு கிடைக்கும்?

புழுப் பூச்சிகளைத் தவளைக்கு உணவாக்கி, அத் தவளையையே பாம்புக்கு உணவாக்கும் இயற்கையின் அமைப்பை எவ்வாறு புரிந்துகொள்வது?

* * *

வீட்டில் விளக்கினை ஏற்றுகிறோம். வெளியிலிருந்து பூச்சிகள் விளக்கை நோக்கிப் பறந்து வந்து, விளக்கில் விழுந்து மடிகின்றன! ஒளியினை நோக்கி அவை பறந்து வருவது தம் உயிரினைவிடத்தானா? ஒளியைக் காட்டி உயிர்களைப் பறிக்கின்றதே இயற்கை? இதன் பொருள் என்ன?

* * *

உள்ளத்து வினவும் உதிக்கும் விடையும்:

அன்புருவானது இறைமை என்றால், இன்பம் நிறைந்தது இறைமை என்றால், இறைமை தோன்றும் இயற்கை அமைப்பிலே இத்தகைய புரியாத புதிர்கள் எவ்வாறு காணப் படுகின்றன?

புரியாத புதிர்கள் மட்டுமா உள்ளன? உள்ளத்தை உலுக்கும் துயரங்கள்தாம் எத்தனை? அதோ, ஐந்து வயதுச் சிறுமி. அது பிறவிக்குருடு என்கிறார்கள். இந்த உலகத்தையே கண்ணால் பாராமல் அது தன் வாழ்வைக் கழிக்கவேண்டுமே? எவ்வளவு கொடுமை! பிறவி ஊமைகளின் கதிதான் என்ன?

எங்கோ ஓர் எரிமலை. திடீரென்று வெடித்து அதனால் பல்லாயிரம் பேர்கள் உயிரிழந்தனர் என்று செய்தி இதழ்களில் படிக்கின்றோம். கடல் பொங்கி எழுந்து பல ஊர்களை மூழ்கடித்துவிட்டது என்று கேள்விப்படுகிறோம். இவ்வாறு எத்தனை ஆயிரம் பேர்கள் மாண்டு மறைகின்றனர்? எத்தகைய அழிவு நேருகின்றது? இவற்றுக்கெல்லாம் விளக்கம் என்ன?

'அன்பில் விளைந்த ஆரமுதான' இறைமை நிலவும் இயற்கையில் ஏன் இந்த முரண்பாடு?

* * *

உண்மையை நாடும் உள்ளங்களில் இத்தகு வினாக்கள் தோன்றி விடை தேடுகின்றன. இவ்வினாக்கள் அன்றும் எழுந்தன, இன்றும் எழுகின்றன. இனியும் எழப்போகின்றன. அன்றும், இன்றும், என்றும் எழும் இவ்வினாக்களுக்கு விடை கிடைப்பதில்லை.

கிடைக்கும் விடையெல்லாம் 'விதி' என்ற ஒரு சொல் தான். இயற்கையின் இயக்கத்தினை, இயற்கை வகுத்துள்ள சட்டத்தினை 'விதி' என்று கூறுகின்றனர். விதி என்றால் அவ்விதிப்படி நடக்கப்போவது என்னவென்று நமக்குத் தெரிய வேண்டுமன்றோ? தெரிவதில்லையே! நடந்து முடிந்ததை விதியென்று காட்டி விளக்கங் கூறப்படுகிறது! இது விடை கூறாத விளக்கந்தானே?

அடிப்படையான இப்புதிர்கள் குறித்து ஆன்றமைந்த சான்றோர்கள் எத்தனையோ காலம் எண்ணி எண்ணிப் பார்த்துள்ளனர். அவர்கள் இதயம் கண்டதை எடுத்தோதியும் உள்ளனர்.

அகிலாண்டங்களின் புறத்தோற்றத்தையே முழுதாகக் காண இயலாத மனிதனால் அகிலாண்டவமைப்பின் உட்பொருளை எவ்வாறு காண இயலும் என்பதே அவர்கள் உள்ளத் துதிக்கும் உண்மையாகும்.

**இயற்கையின் இடையறாத இயக்கம் :**

"ஒவ்வொரு நிகழ்வுக்கும் காரணங் காண விரும்புவது மனித ஆன்மாவின் இயல்பாகும். ஆயினும் நிகழ்வுகளுக்கான காரணங்களின் முழுமை மனித மனத்திற்கு அப்பாற்பட்டது. பல்கிப் பெருகும் பல சிக்கல் நிறைந்த நிலைகளை ஆழ்ந்து காணாத மனித உள்ளம் ஒன்றுக்கு முன்னால் நிகழ்வதைக் காரணம் என்றும் அதற்குப் பின்னால் நிகழ்வதைக் காரியம் என்றும் கொள்ளுகின்றது"—இவ்வாறு உருசிய ஞானி டால்ஸ்டாய் கூறுகின்றார்.

தொடர்ந்து ஒரு நாடகம் நடக்கின்றது. அந் நாடகத்தில் ஒரு காட்சியை மட்டும் பார்த்துவிட்டு அந்நாடகம் துன்பியல் ஆனதா, இன்பியல் ஆனதா என்று நம்மால் கூற முடியுமா? அவ்வாறு கூற முற்படுதல் அறிவுக்கு உகந்ததா? இயற்கை நடத்தும் நாடகத்திற்குக் காலக்கணக்கு இல்லை. நாம் காணும் காட்சியோ ஓடுங்கால வெள்ளத்தின் ஒரு திவலைக்கும் திவலையானது. இந்தத் திவலையைக் கண்டுவிட்டுக் கால நாடகத்தின் தன்மையைக் கணிக்க முயலுகிறோம் நாம். அம்முயற்சி இயலாதது என்கின்றனர், எண்ணி எண்ணிப் பார்த்து இதயஞானம் பெற்றோர்கள்.

"இடையறாத இயக்கம் என்பதை எண்ணிப் பார்க்கவும் இயலாதது மனித உள்ளம். இவ்வியக்கத்தின் ஏதோ ஒரு

பகுதி மட்டுமே மனிதனுக்குப் புலப்படுகின்றது. இடையறுத இயக்கத்தில் தான் விரும்பும் தனிப் பகுதி ஒன்றை மட்டும் எடுத்துக் கொள்வதால்தான் தவறுகள் விளைகின்றன...... இயற்கை என்பது இடையறுத இயக்கம் என்பதை மனிதன் உணர வேண்டும்''—உலக வரலாற்றினை உற்று நோக்கும் உயர்ந்த சிந்தனையில் உதித்த உண்மை இது.

''சக்கரம் சுழலுகின்றது, இடையறுது சுழலுகின்றது. அச்சக்கரத்தின் சுழற்சி குறைவதும் கூடுவதும் அதைச் சுற்று பவனைப் பொறுத்ததுதானே? அதுபோல் உலகத்து நிகழ்வுகள் செப்பிடு வித்தைகள் போல் புரியாத புதிர்களாகக் காணப்படு கின்றன. இந்நிகழ்வுகள் எல்லாம் ஒரு தொடர்சங்கிலியை ஒத்த இடையறுத இயக்கத்தின் பகுதிகள் என்பதை நாம் உணர்வதுதான் உண்மையை உணர்வதாகும்'' என்கின்றுர், இந்நூற்றுண்டுக் கவிஞர் :

''கைப்பிடி கொண்டு சுழற்றுவோன்—தன்
கணக்கிற் சுழன்றிடும் சக்கரம்—அது
தப்பி மிகையுங் குறையுமாச்—சுற்றும்
தன்மை அதற்குள தாகுமோ ?—இதை
ஒப்பிடலாகும் புவியின் மேல்—என்றும்
உள்ள உயிர்களின் வாழ்விற்கே—ஒரு
செப்பிடு வித்தையைப் போலவே—புவிச்
செய்திகள் தோன்றிடு மாயினும்;

இங்கிவை யாவுந் தவறிலா—விதி
ஏற்று நடக்குஞ் செயல்களாம்;—முடி
வெங்கணும் இன்றி எவற்றினும்—என்றும்
ஏறி இடையின்றிச் செல்வதாம்—ஒரு
சங்கிலி யாக்கும் விதி கண்டீர்—வெறுஞ்
சாத்திரம் அன்றிது சத்தியம்;—நின்று
மங்கியோர் நாளில் அழிவதாம்—நங்கள்
வாழ்க்கை இதனைக் கடந்ததோ ?''

—(பாரதியார் - பாஞ்சாலி சபதம்)

ஈறில்லாத தொடர் சங்கிலியைப்போல் முதலும் முடிவும் இன்றி இடையறுது என்றும் இயங்கும் இயற்கையின் தன்மையினை, கணத்திலே தோன்றி மறையும் வாழ்க்கையை அளவாகக்கொண்டு கணித்தல் இயலாது என்பது உண்மை தான் போலும் !

மலர் மேவுந் தேனீ குழந்தையைக் கொட்டி விடுகிறது. இதனால் அச்சமுற்றுக் குழந்தைபிறரைக் கொட்டுவதற்கென்றே தேனீ வாழ்கின்றது என்று முடிவு செய்கிறது. மலரின் மது வுண்டுபாடும் தேனீயின்ரீங்காரத்தில் மயங்கும் கவிஞன், தேனீ வாழ்வது மலரின் மதுவினை உண்ணுவதற்குத்தான் என்கிறான். தேனைச் சேகரிப்பதற்கெனத் தேனீக்களை வளர்ப்பவன், தேன் சேகரிப்பதே தேனீக்கள் வாழ்வின் குறிக்கோள் என்று எண்ணுகின்றான். மலர் விட்டு மலர் தாவும் தேனீக்களின் கால்களில் ஒட்டி நிற்கும் மகரந்தத்தூள் ஒரு மலரிலிருந்து மற்றொரு மலருக்கு மாறுகின்றது. அதனால் மலர் வளம் பெறுகின்றது. மலர்களை வளம்பெறச் செய்வதற்காகவே தேனீக்கள் வாழ்கின்றன என்கிறான், தாவரவியலைக் கற்றவன்.

ஆனால், பிறரைக் கொட்டுவதற்கென்றே, மதுவுண்ண மட்டுமோ, தேனைச் சேகரிப்பதற்கென்று மாத்திரமோ, மலர் களுக்கு வளமூட்டுவதற்காகவோ தேனீ வாழவில்லை. அதன் வாழ்க்கை இவையனைத்தையும் கடந்ததாக உள்ளது. ஆயினும், அவரவர் தம் அறிவுக்கேற்பத் தேனீயின் வாழ்க்கைப் பயனைக் கணிக்கின்றனர். நமது அறிவு உயர உயர, தேனீயின் வாழ்வுப் பயன் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள முடியாது என்பதை நாம் உணர்கின்றோம்.

ஓர் உயிருக்கும் மற்ற உயிர்த் தோற்றங்களுக்கும் உள்ள தொடர்பினை வைத்தே உயிர்களின் தன்மையை நாம் அளக்க முயலுகின்றோம். இம்முயற்சி தவறாகவே முடிகின்றது.

தீதறியா மானைக் கொன்றதால் சிறுத்தை கொடியது, பூச்சிகளைத் தின்னும் தவளை கொடியது, அத்தவளையை விழுங்கும் பாம்பும் கொடியது என்று நாம் கணிக்கின்றோம். உயிரின வாழ்க்கையின் ஓயாத சுழற்சியில் ஒரு பகுதியை மட்டும் கண்டுவிட்டு நாம் கணிக்கும் இம்முயற்சி தவறானது போல்தானே தோன்றுகிறது.

**பிறப்பும் இறப்பும், இன்பமும், துன்பமும் :**

மானின் உடம்பு சிறுத்தைக்கு உணவு. சிறுத்தை தனது உணவைத் தேடும் முயற்சியில் மானின் உயிரைப் போக்குவது இன்றியமையாததாகின்றது. மானுக்கு மரண வேதனையால் துன்பம், சிறுத்தைக்கோ பசியாறுவதால் இன்பம்! ஒன்றின் துன்பத்தில் மற்றொன்றின் இன்பம் உள்ளது! இவ்வாறு

துன்பமும் இன்பமும் இணைந்த செயலைத் துன்பச்செயல் என்பதா இன்பச் செயல் என்பதா? துன்பத்தின் எல்லையில் இன்பம் பிறக்கும்பொழுது, இன்பத்தின் பிறப்பிடமாகத் துன்பம் இருக்கும் பொழுது, இன்பம் என்றும், துன்பம் என்றும் பிரித்துக் கூறுவது எப்படி?

விளக்கொளியால் ஈர்க்கப்பட்ட பூச்சிகள் விளக்கில் வீழ்ந்து மாய்வதைக் காணுகின்றோம். ஆனால், அதே நேரத்தில் வேறிடங்களில் ஆயிரக்கணக்கில் அவை தோன்றிக் கொண்டும் இருக்கின்றனவே! பூச்சிகளை மாய்ப்பது இயற்கை என்றால், அவற்றைத் தோற்றுவிப்பதும் இயற்கைதானே? பூச்சிகள் மடியும் நிகழ்வோடு அவை உற்பத்தியாகும் நிகழ் வினையும் சேர்த்துப் பார்த்தால், இறப்பும் பிறப்பும் இணைந்த செயல்களாகவன்றோ தோன்றுகின்றன!

நான் பேனாவை எடுத்து எழுதும்பொழுதும், நீங்கள் இதை உரக்கப் படிக்கும்பொழுதும் இலட்சக்கணக்கான நுண் அணுப் பூச்சிகள் மாண்டு மடிகின்றன என்பது இன்றைய விஞ்ஞானம் காணும் உண்மை. இந்த அழிவினைக் கொடுமைச் செயல் என்று கூறுதல் பொருந்துமா?

இறப்பு இன்றிப் பிறப்பு இல்லை என்பதை வித்து விளைவதிலே காணுகின்றோம். வித்து மடிகின்றது, முளை எழுகின்றது. மடிந்த வித்து மீண்டும் முளைப்பதைத்தானே 'முளை' என்கிறோம்? வித்தின் அழிவின்றி முளையின் தோற்றம் இல்லை; வித்தின் இறப்பின்றி முளையின் பிறப்பு இல்லை. எனவே, அழிவு இன்றித் தோற்றமும், இறப்பு இன்றிப் பிறப்பும் இல்லை என்பது தெரிகின்றது. வித்தின் இறப்பு இன்றிப் பிறப்பும் இல்லை என்பது தெரிகின்றது. வித்தின் இறப்பு முளையின் பிறப்பாகின்றது; முளையின் பிறப்பே வித்தின் இறப்பாகின்றது. இறப்பினது மூலத்தைப் பிறப்பிலும், பிறப்பினது மூலத்தை இறப்பிலும் காணுகின்றோம். இறப்பும் பிறப்பும் ஒரே செயலாகவன்றோ உள்ளன! இறப்பே பிறப்பா கிறது, பிறப்பே இறப்பாகிறது!

ஒளி இருள், இன்பம் துன்பம் என்று எடுத்துக் கொண்டால் அவை ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபட்ட தன்று என்பது தெளிவாகும்.

ஒளி என்று எதைக் கூறுகின்றோம்? இருள் இல்லாததை ஒளி என்கிறோம். இருளே இல்லை என்றால் ஒளி என்ற

சொல்லுக்குப் பொருளே இல்லாமல் ஆகிவிடும். ஒளியின் எல்லையில் இருள் இருப்பதால்தான் ஒளியை ஒளியாக நாம் காண முடிகின்றது. இருள் என்று ஒன்று இல்லாமல் எல்லாமே ஒளியாக இருந்துவிடில், ஒளி என்று எதைக் கூறுவது? எனவே, ஒளியை ஒளியாகக் காட்டுவது இருள்தான்! இருள் இன்றி ஒளி இல்லை.

இது போன்றே துன்பம் இல்லையேல் இன்பம் ஏது? எல்லாமே இன்பமாக இருந்துவிடில், இன்பம் என்று எதைச் சிறப்பித்துக் கூறுவது? இன்பத்தின் எல்லையில் துன்பம் இருப்பதால்தான், துன்பத்தின் முடிவில் இன்பம் எழுவதால் தான் இன்பமென்றும் துன்பமென்றும் வேறுபடுத்திக் காண முடிகிறது. இரண்டில் ஒன்று இல்லையெனில், இரண்டுமே இல்லாதனவாகிவிடுகின்றன. இன்பம் இன்றித் துன்பமில்லை, துன்பமின்றி இன்பமில்லை.

எனவேதான் இன்பத்தை இனிது எனவும், துன்பத்தை இனிது இல்லை எனவும் இறைமையை உணர்ந்தோர் கருதுவ தில்லை என்கின்றனர் சான்றோர்.

> ''இன்பத்தை இனிதெனவும்—துன்பம்
> இனிதில்லை என்றுமவன் எண்ணுவதில்லை''
>
> (பாரதியார்—கண்ணன் பாட்டு)

இன்ப துன்பங்களின் இயல்பினை உணர்ந்த இதயத்தின் குரலே,

> ''............ ............ ............
> சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
> இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்
> இன்னா தென்றலு மிலமே ............''

என்று ஒலிக்கின்றது.

**இடமாற்றமும் உருமாற்றமும் :**

''பருப்பொருள்கள் எதுவுமே அழிவதில்லை''

என்பது விஞ்ஞான உண்மை. திடப்பொருளாக இருப்பது திரவப்பொருளாகலாம் அல்லது ஆவிப்பொருளாகலாம்; மீண்டும் ஆவிப்பொருள் திரவப்பொருளாகவோ திடப்பொரு ளாகவோ மாறலாம். ஆனால், அப்பொருள் இல்லாததாகி அழிந்துபோவதில்லை. பருப்பொருள்களுக்கே அழிவில்லை

யெனில், நுண்பொருள்களான உயிர்களுக்கு அழிவேது? பருப் பொருள்களுக்கு அழிவில்லை என்பது விஞ்ஞான உண்மை; நுண்பொருள்களான உயிர்களுக்கு அழிவில்லை என்பது மெய்ஞ்ஞான உண்மை.

உயிர் இடம் மாறுவதைத்தான் 'இறப்பு' என்றும், 'பிறப்பு' என்றும் பிரித்துக் காண்கிறோம். பொருள் உரு மாறு வதைத்தான் 'அழிவு' என்றும், 'ஆக்கம்' என்றும் வேறாகக் காண்கின்றோம். இடமாற்றமும் உருமாற்றமும் உண்மையில் தொடர்வான நிகழ்வின் தோற்றங்கள் தாமே? இந்நிகழ்வின் தொடர்வுத் தன்மையை மறந்துவிட்டு, இடையிலுள்ள சிறியதொரு பகுதியை மட்டுமே எடுத்துக்கொண்டு இறப் பென்றும் பிறப்பென்றும், அழிவென்றும் ஆக்கமென்றும் கொள்ளுதல் பொருந்தாதன்றோ?

இவ்வாறாக, உயிர்களின் இடமாற்றங்களையும் பொருள் களின் உருமாற்றங்களையும் கொண்டதே இயற்கையின் இயக்கம் ஆகின்றது. எனவேதான் இயற்கையின் இயக் கத்தில் பிறப்பும் இறப்பும், ஆக்கமும் அழிவும் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன. இந்த இயற்கை இயக்கம் நின்றுவிடில் இறப்பில்லை, பிறப்புமில்லை; அழிவில்லை, ஆக்கமு மில்லை. இயற்கையின் இயக்கம் நின்றுவிடும் நிலை ஏற்பட்டால், அதுவே உண்மையான இறப்பு நிலையாகும், அழிவு நிலை யாகும். எனவே, இறப்பும் பிறப்பும், அழிவும் ஆக்கமும் தொடர்ந்து நிகழ்ந்துகொண்டிருப்பதுதான் இயற்கையின் உயிரோட்டம், இறைமையின் அருளாட்டம்.

இறைமையின் அயராத அருளாட்டத்தை உணர்த்தும் வகையில்தான் போலும், ஆண்டவனைத் தாண்டவனாக உருவகம் செய்து போற்றினர்.

"அருட் பொது நடமிடு தாண்டவனே
அருட் பெருஞ் சோதியென் ஆண்டவனே"

ஆடும் பாதமென இறைமையைப் பாடித் துதித்தனர்:

"ஆடிய பாதமன் றாடிய பாதம்
ஆடிய பாதநின் றாடிய பாதம்" —இராமலிங்க அடிகள்

ஆடுவதால் அமைதி குலையவில்லை; அப்பாதம் மன்றாடி னாலும் நின்றாடுகிறது. இந்த அமைதி குலையாத நிலையைக் குறிக்கத்தான்போலும், காலமென்ற ஆழ்கடலில் கண்துயிலு

வதாகவும் கண்டு போற்றினர் இறைமையை. எனினும், இடையருது இயங்கும் இயற்கையின் அமைதியில் இசைந்துள்ள அரும்பொருளை எவரே கண்டார்கள் ?

எல்லையில்லா இயற்கையனைத்தையும் இணைத்துக் காண்பதே நம்மால் இயலாதபொழுது, அந்த இயற்கை இயக்கத்தின் உட்பொருளை நாம் எவ்வாறு காணுதல் இயலும் ? காலத்தொடு கற்பனை கடந்த இயற்கை இயக்கம் என்ற வெள்ளத்திலே இழுத்துச் செல்லப்படும் நம்மால் அந்த இயக்கத்தின் தன்மையையும் தகைமையையும், குறியையும் நெறியையும் எவ்வாறு அறிந்துகொள்ள முடியும், அறுதியிட முடியும் ? ஆயினும், மனித உள்ளம் இதனை உணர்ந்தறிய உன்னுகிறது ; எவ்வளவு உன்னி உன்னிப் பார்த்தாலும் இதை உணர்ந்தறிய இயலாது என்ற உண்மையைக் காணுகின்றது. இந்த உண்மையை உணர்வதால் அஃது உயருகின்றது.

ஆதலால்தான், "உயர்ந்த ஞானம் என்பது ஒன்றுமே தெரியவில்லை என்பதை உணர்வதுதான்" என்கிருர், ஞானி டால்ஸ்டாய்.

"எல்லா மறிந்தவரும் ஏதுமறி யாதவரும்
இல்லையெனும் இவ்வுலகம்" —தாயுமானவர்

என்கிருர் மெய்யடியார்.

இந்த உயர்ஞானம் பெற்ருேர்தாம் "ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்ருேர்" எனப் போற்றப்பெறுகின்றனர்.

---

## முழுநிறை அறிவு

முழுநிறை அறிவு நாற்கூறுடையது. அவையே, அறிவு—அஃதாவது நேர்மையான செயல் செய்யும் ஒழுங்குமுறை ; நேர்மை—அஃதாவது தனிவாழ்வு பொதுவாழ்வு இரண்டிலும் ஒப்பநடக்கும் நிலை ; வீரம் - அஃதாவது இடர்கண்டு விலகாது ஏற்றல் ; தன்னடக்கம் - அஃதாவது அவாவை அடக்கி வழிப்படுத்தல்.

—பிளேட்டோ.

# உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள்

## துல் (வளைதற் கருத்து வேர்ச்சொல்)

### [ஞா. தேவநேயன்]

துல்—துலம்—துளம்—துளங்கு. துளங்குதல்=சாய்தல், அசைதல், வருந்துதல். தெ. தொளங்கு, ம. துலகு. துளம்—துடம்—தடம்=வளைவு.

"தடவென் கிளவி கோட்டமுஞ் செய்யும்." (தொல். சொல். 321).

"தடமருப் பெருமை" (நற். 120).

துல்—(துறு)—துறள்—துறடு=வளைந்த கத்தி அல்லது கருவி. க. தொறடு.

துறடு — துறட்டு = 1. முண்மரவகை. 2 சிக்கல். 3. ஏதம் (அபாயம்). "ஆங்கோர் துறட்டுண்டதனை யான் சொல்வேன்" (விறலிவிடு. 150).

துறடு—துறட்டி=1. அங்குசம். 2. காய் பறிக்கும் துறட்டுக் கோல். 3. சிக்கு. 4. துறட்டிச் செடி.

ப. க. தொறடு. வ. த்ரோட்டி. துறட்டுமுள்=1. செடில். 2. துறட்டிச்செடி.

துறட்டி — தோட்டி=1. அங்குசம். "உரனென்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்" (குறள். 24). 2. கொக்கி. 3. பகைவர் பாதத்தைக் குத்த நிலத்திற் பதிக்கப் படும் கூரிய படைக்கருவி. "தோட்டி முள் முதலியன பதித்த காவற்காடு" (தொல். பொ. 65, உரை). க. தோட்டி (d), ம. தோட்டி.

துல் — தில் — (திர்) — திரி. திரிதல்=1. வளைதல். 2. திரும்புதல், திரும்பிவருதல். "ஒன்றைச் செப்பினை திரிதி யென்றான்" (கம்பரா. அங்கத. 10). 3. திசை திரும்புதல்.

"நாராசத் திரிவிற் கொள்ளத்தகுவது காந்தம்" (மணி. 27:55-6). 4. சுற்றுதல். 5. சுழலுதல். வலந்திரியாப் பொங்கி (பு. வெ. 9 : 12). 6. அலைதல்.

"வண்டாய்த் திரிதருங் காலத்து" (நாலடி. 284). 7. திருகுதல். "திரிந்து மறிந்துவீழ் தாடி" (கலித். 15). 8. வேறுபடுதல். "நாஅல் வேத நெறி திரியினும்" (புறம். 2). 9. எழுத்து மாறுதல். "தோன்றல் திரிதல் கெடுதல்" (நன். 154). 10. சொல் மாறியமைதல். "சொற்றிரியினும் பொருள் திரியா வினைக்குறை." (நன் 346) 11. மயங்குதல். "திரிந்தயர்ந் தகன்றோடி" (பரிபா. 3 : 54). 12. கெடுதல். (திவா).

க. திரி. தெ. திருகு. ம. திரிக்க.

திரித்தல் = 1. சுழற்றுதல். "எஃகுவலந் திரிப்ப" (திருமுரு. 111). 2. முறுக்குதல். "கயிறு திரிக்கிறான்" (உ. வ.). 3. திரும்பச் செய்தல். "சென்று சென் றழியு மாவி திரிக்குமால்" (கம்பரா. மாயாசனக. 23). 4. அலை வித்தல. "கொடிப்புள் திரித்தாய்" (திவ். பெரியதி. 1:10:2) 5. வேறுபடுத்துதல். "அறிவு திரித்து" (மணி. 23 : 39) "துயவென் கிளவி அறிவின் திரிபே." (தொல். 851). 6. திரிகையில் மா வாக்குதல். 7. பொருள் மாற்றுதல். 8. சொல் வடிவு மாற்றுதல். 9. மொழி பெயர்த்தல். 10. மடக்கின் முதலெழுத்தை மாற்றுதல். 11. சேதித்தல். "அவனுருவு திரித்திட்டோன்" (பரிபா. 5 : 35). ம. திரிக்க. க. திருகிசு.

திரி — திரிவு = 1. வேறுபாடு. "திரிவின்றித் துஞ்சே மென மொழிதி" (பு. வெ. 12 : 15). 2. திரிபுக்காட்சி. "ஐயமே திரிவே யென்னு மவையற" (விநாயகபு. 2 : 46). க. திரிவு.

திரிவு — திரிபு = 1. வேறுபாடு. "குறிதிரி பறியா வறிவனை" (கலித். 39 : 46). 2. (வீடுபேற்றிற்கு இடை யூறாய் நிற்கும்) மயக்க அறிவு. 3. முதலெழுத்தல்லாத தொடர்கள் எழுத்தொத்து வரும் மடக்கு.

திரிசொல் = 1. வேறுபட்ட சொல். 2. இயற்சொல் லினின்று வேறுபடுத்தி யமைக்கப்பட்ட சொல்.

"இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்று" (தொல். 880). திரிகல் = மாவரைக்குங் கல். "திரிக லொப் புடைத்தாய........தொண்டகம்" (கல்லா. 24 : 13). திரிமரம் = கூலம் அரைக்கும் மரம். "களிற்றுத்தாள் புரையுந் திரிமரப் பந்தர்" (பெரும்பாண். 187). திரி—திரிகை = 1. திரிகல்.

2. குயவன் சக்கரம். "குயவர் திரிகையென" (கம்பரா. மூல பல. 165). 3. கூத்தின் சைகை வகை. (சிலப். பக். 81).

திரி—திகிரி=1. வட்டவடிவு. (பிங்.) 2. குயவன் சக்கரம். "அத்திகிரி பரித்த பச்சை மண்ணெனலாகும்" (காஞ்சிப்பு. திருநகரம். 76). 3. சக்கரப்படை. "காலநேமி மேலேவிய திகிரிபோல்" (கம்பரா. சித்திர 40). 4. கதிரவன் "விசும்புடன் விளங்கும் விரை செலற்றிகிரி" (அகம். 53). 5. வண்டிச்சக்கரம். 6. வண்டி. 7. தேர். "சேகரக் கூவிரத் திகிரி யூர்வோன்" (ஞானு. 7 ; 17). 8. அரசாணை. "தீதின் றுருள்கநீ யேந்திய திகிரி" (மணி. 22 : 16). 9. உருளை. "ஒரு தனித் திகிரி யுரவோன்" (சிலப். 4 : 2).

திர்—திரு—திருகு. திருகுதல்=செ. குன்றியவினை— 1. முறுகுதல். "பரிதி சினந்திருகிய கடுந்திறல் வேனில்" (பெரும்பாண். 3). 2. மாறுபடுதல். "திருகு சிந்தையைத் தீர்த்து" (தேவா. 338 : 2). செ. குன்றுவினை —1. முறுக்குதல் "யாக்கையைத் திசைமுகன் படைசென்று திருக" (கம்பரா. பாசப். 58). 2. பின்னுதல். "திருகு குழலுமை நங்கை" (தேவா. 657 : 3). 3. திருகிப் பறித்தல். தெ. திருகு (g) க. திருகு (h). திருகுவலி=உடம்பை முறுக்கும் நோவு. திருகு— திருகி. தேங்காய் திருகி=ஒரு கருவி.

திருகாணி=1. முறுக்காணி (Screw) 2. அணியின் திருகு மரை. 3. ஒரு வகைக்காது மூக்கணி. க. திருகாணி (g). கொண்டைத் திருகு=கொண்டையி லணியும் ஓர் அணி. திருகு—திருக்கு=1. முறுக்கு. 2. முடக்கம். "மதிற்றிருக்காற் ..........பெயர் திரு முடங்கலென்றார்" (திருவாலவா 47 : 14) 3. மாறுபாடு. "பெருந்திருக் குளத்துளான்" (திருவாலவா. 16 : 34). 4. வஞ்சனை.

தித்திருக்கு=பெருவஞ்சனை.

திரு—திரும். திருமல்=திரும்புதல். "உண்பொருந் திரும்தின்" (நன் 137).

திரும்—திரும்பு. திரும்புதல்=1. வளைதல். 2. கதிரவன் சாய்தல். 3. விலகுதல். 4. மாறுதல். 5. மீளுதல். 6. பிசகுதல். திரும்ப=மறுபடி, அடுத்து, மீள. திரும்பவும்=மறுபடியும், மேலும், மீண்டும். திரும்பத் திரும்ப=அடிக்கடி, மேலும் மேலும், மீண்டும் மீண்டும். திரும்பி=திரும்ப. திரும்பியும்= திரும்பவும். (உ. வ.)

திரும்பு—திருப்பு. திருப்புதல்=1. திரும்புவித்தல், மடக்குதல். "ஆட்டு மந்தையைத் திருப்பினன்" (உ. வ). 2. மாற்றுதல். "கயவர் குணமட்டுந் திருப்ப வசமோ" (குமரே. சத. 39). 3. முறுக்குதல். 4. நடைபெயர்த்தல். இது விவிலியத்தின் புதிய திருப்புதல். (கிறித்தவ வழக்கு). 5. மொழி பெயர்த்தல். திருக்குறள் முப்பது மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. (உ. வ.) 6. பாடத்தை மறுமுறை ஓதுதல். 7. கை பை கலம் முதலியவற்றை மேல் கீழாக அல்லது தலை கீழாகக் கவிழ்த்தல். 8. அடகு வைத்ததை மீட்டல். 9. வாங்கினதைத் திரும்பக் கொடுத்தல். 10. ஒருவர் அனுப்பினதை ஏற்றுக்கொள்ளாது திரும்புவித்தல். 11. பொத்தக ஏட்டின் பக்கத்தைத் தள்ளுதல். 12. செய்வினையைச் செய்தவர் மேல் ஏவுதல். 13. நஞ்சை மாற்றுதல்.

க. திருகிசு. தெ. திப்பு.

திருப்பு=ஒரு முறை போய் வருகை (trip).

திருப்பு—திருப்பம்=1. திரும்புகை. "வடபத்திரசாயீ முகத்திருப்பங்கொண்டு" (குருபரம். 77). 2. திரும்புகோடி. 3. வாழ்க்கையில் அல்லது கதையில் நேரும் பெருமாற்றம். (Turning point).

திரும்பு—திறம்பு. திறம்புதல்=மாறுபடுதல், மீறுதல், விலகுதல்.

திரு—தெரு—தெரும். தெரும்வரல்—தெருமரல்=1. மனச்சுழற்சி. "அலமரல் தெருமரல் ஆயிரண்டுஞ் சுழற்சி" (தொல். சொல். 311). 2. அச்சம். (திவா.)

தெரும் வருதல்—தெருமருதல்=மனஞ்சுழலுதல். "வளை முன்கை பற்றிநலியத் தெருமந்திட்டு" (கலித். 51).

தில்—தெல்—தென். தென்னுதல்=(செ. குன்றிய வினை)— 1. கோணுதல். 2. சாய்தல். (செ. குன்றாவினை)—தெம்புதல்.

பல் தென்னிக்கொண்டிருக்கிறது என்பது உலக வழக்கு.

தென்—தென்னை=பெரும்பாலும் கோணி வளரும் மரம்.

"பல்வகை யுதவி வழிபடு பண்பின்
அல்லோர்க் களிக்கும் அதுமுடத் தெங்கே" (நன். 35)

தென்—தென்கு—தெங்கு=1. தென்னை. "தெங்கி னிளநீ ருதிர்க்கும் வளமிகு நன்னாடு" (புறம். 29). 2. தெங்கந்தீவு. 3. போர்ச்சேவலின் திறங்குறிக்கும் குழூஉக் குறிகளுள் ஒன்று. "தெங்குக்குத் தெங்குவெல்லும் எனக் கோழிகளின் நிறமறிந்து விடுதல்" (பு. வெ. 12, வென்றிப். 6, உரை). க. தெங்கு. ம. தெங்ஙு.

தெங்கு—தெங்கம். "தெங்கங்களு நெடும்பெண்ணையும் பழம்வீழ் மணற்படப்பை" (தேவா. 846 : 3).

தெங்கங்காய்—தேங்காய். "தெங்கங்காய்போலத் திரண் டுருண்ட பைங்கூந்தல்" (யாப். வி. 95, பக். 372). தெ. தெங்(க்)காய. ம. தேங்ஙா.

தென்—தென்று—தெண்டு. தெண்டுதல்=நெம்புதல், கிளப்புதல்.

தெண்டுதடி=நெம்புதடி.

தெண்டு—தெண்டில்=தலையை நெம்புவதுபோல் மேலுங் கீழுமாக அலைக்கும் ஓணான்.

தென்—தெறு—தெற்று. தெற்றுதல்=1. மாறுபடுதல். 2. முறுக்கிக்கொள்ளுதல். "தெற்றுகொடி முல்லையொடு" (தேவா. 622 : 6). 3. இடறுதல். "தெற்றுகாலின ரோடினர்" (உபதேசகா. சிவவிரத. 139). 4. தடைப்படுதல். "இல்வாழ்க்கை யென்னு மியல்புடை வான்சகடம் செல்லாது தெற்றிற்று நின்று" (அறநெறி. 158). 5. பிழைசெய்தல். "தெற்றினார் புரங்கள் செற்றார்" (பெரியபு. திருநீலகண்ட. 3). 6. மாற்றுதல். "இது சந்திரன் தொழிலைத் தெற்றினமையால் தெற்றுருவகம்" (வீரசோ. அலங். 18, உரை). 7. இகலுதல். "மருட்டி யெங்குந் தெற்றிய விவனை" (திருவாலவா. 30 : 23). 8. கொன்னுதல். 9. முட்டிதட்டுதல். 10. பின்னுதல்.

தெற்றல்=மாறுபாடுடையவன். "தெற்றலாகிய தென் னிலங்கைக் கிறைவன்" (தேவா. 680 : 8).

தெற்றுக்கால்=முட்டிதட்டுங்கால்.

தெற்றிக்காலை=பின்கால் முட்டிதட்டுங்காலை.

"தெற்றிக்காலை கழுத்தால் நெரிக்க" (பருளை. பள்ளு.)

தெற்றுப்பல் = தென்னிக்கொண்டு அல்லது ஒன்றோ டொன்று பின்னிக்கொண்டிருக்கும் பல்.

தெற்றுமாற்று = ஒமாற்று.

தெற்றுவாய் = கொன்னைவாய்.

தென் = தென்னைமரம் இயற்கையாக வளர்ந்ததென் றிசை. குமரிக்கண்டத்தில் ஏழ்தெங்க நாடிருந்தமையையும், தென்கண்டத்திலும் அதனையடுத்த தீவுகளிலும் இன்றும் தென்னை செழித்து வளர்தலையும், நோக்குக.

தென்—தெற்கு = தென்றிசை.

தென்மொழி = குமரிக்கண்டத்தின் தெற்கில் தோன்றிய தமிழ்மொழி.

தென்புலம் = தமிழகத்தின் தெற்கிலிருந்த பாண்டி நாடு. தென்னவன் = தென்புலத்தை யாண்ட பாண்டியன்.

---

## மொழி—ஓர் உளவியல்

*உள்ளத்தின் நிகழ்ச்சிகளை உணர்த்தவே மொழி ஒரு கருவியாகப் பயன்படுகின்றது. எனவே மொழியியல் என்பது எடுத்துக்காட்டுடன் இயைந்த உளநூல் எனக் கருதுவாரும் உளர். எனினும் பேசப்படும் மொழியை ஆராய்வதுபோல் உள்ளத்தின் இயல்பை ஆராய முடிவ தில்லை. மொழி பேசப்படும்போது உள்ளத்தில் என்ன நிகழ்கிறது என ஆராய்ந்து கூறுதல் எளிதன்று.*

—Pillsbury and Meader, The Psychology of Language p. 17

# ஆரியப்படை கடந்த, அரசு கட்டிலில் துஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியன்

[மயிலை சீனி வேங்கடசாமி]

கடைச் சங்க காலத்தில் ஆட்சிசெய்த பாண்டியரில் சிலர் நெடுஞ்செழியன் என்று பெயர் பெற்றிருந்தார்கள். அவர்களின் பெயர் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. அவர்களை, இன்னின்ன நெடுஞ்செழியர் என்று பிரித்தறிவதற்கு அவர்பெயர்களுடன் சில அடைமொழியிட்டு வழங்கினார்கள். நம்பி நெடுஞ்செழியன், ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன், தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்னும் பெயர்களைக் காண்க. இங்கு ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனுடைய வாழ்க்கை வரலாற்றை ஆராய்வோம்.

மதுரையிலிருந்து பாண்டி நாட்டை யரசாண்ட இந்த நெடுஞ்செழியன் கல்விகற்ற அறிஞன்; செய்யுள் இயற்ற வல்ல கவிஞன். கவிஞனாக விளங்கிய இவன் இயற்றிய செய்யுட்கள் முழுவதும் நமக்குக் கிடைக்கவில்லை. நற்காலமாக இவன் இயற்றிய ஒரே ஒரு செய்யுள் புறநானூற்றில் 183ஆம் செய்யுளாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது. அந்தச் செய்யுள் இது:

> "உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்
> பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே;
> பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளுஞ்
> சிறப்பின் பாலால் தாயுமனந் திரியும்.
> ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
> மூத்தோன் வருக வென்னாது அவருள்
> அறிவுடை யோனாறு அரசுஞ் செல்லும்.
> வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
> கீழ்ப்பா லொருவன் கற்பின்,
> மேற்பா லொருவனும் அவன்கட் படுமே."

(திணை - பொதுவியல்; துறை - பொருள்மொழிக் காஞ்சி. பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் பாடியது.)

விழுமிய பொருள் பொதிந்த இந்தச் செய்யுள் புறநானூற்றில் தொகுக்கப்படும் சிறப்புப்பெற்றுள்ளது. இச்

செய்யுளை இயற்றிய இந்தப் பாண்டியன் யாரிடங் கல்வி பயின்ருன் என்பது தெரியவில்லை.

கோவலனும் கண்ணகியும் மதுரைக்குச் சென்றபோது பாண்டி நாட்டை ஆட்சி செய்து கொண்டிருந்தவன் இந்த நெடுஞ்செழியனே. மதுரையில் வாணிகஞ் செய்து பொருளீட்ட எண்ணிய கோவலன், வாணிக முதலீட்டுக் காகக் கண்ணகியின் பொற்சிலம்பை விற்கச்சென்று வஞ்சகன் ஒருவனுல் 'கள்வன்' என்று குற்றஞ் சாட்டப் பட்டபோது, அக்குற்றத்தைத் தீர விசாரிக்காமல் அவனைக் கொல்வித்தவனும் இந்த நெடுஞ்செழியனே. கோவலன் மேல் சுமத்தப்பட்ட பொய்ப்பழியை நீக்குவதற்காகக் கண்ணகி வழக்குத் தொடுத்து வாதாடியபோது, தான் கோவலனுக்குக் கொலைத் தண்டனை விதித்தது அரசநீதி என்று எடுத்துக்காட்டியவனும் இந்த நெடுஞ்செழியனே. பிறகு கண்ணகி, குற்றஞ்செய்யாதவன்மேல் பொய்க்குற்றஞ் சாட்டிக் கொலை செய்வது அநீதி என்று சான்று காட்டி நிறுவிய போது, தான் செய்தது தவறுதான் என்று கண்டு, தன் தவற்றை யுணர்ந்து அஞ்சி நடுங்கி அரசுகட்டிலில் (சிம்மா சனத்தில்) இருந்தபடியே உயிர் விட்டவனும் இந்த நெடுஞ்செழியனே. இவனுடைய ஆட்சிக்காலத்தில் வடநாட்டி லிருந்து மதுரையின்மேல் படையெடுத்து வந்து போர் செய்த ஆரியப்படையை வென்று ஓட்டித் துரத்தியவனும் இந்த நெடுஞ்செழியனே. இவற்றையெல்லாம் சிலப்பதிகாரம், மதுரைக்காண்டத்தின் இறுதிச் செய்யுளினுல் அறிகிருேம்.

> "வட வாரியர் படை கடந்து
> தென்றமிழ் நாடு ஒருங்கு காணப்
> புரைதீர் கற்பிற் றேவி தன்னுடன்
> அரைசு கட்டிலிற் றுஞ்சிய பாண்டியன்
> நெடுஞ்செழியன்"

என்பது அதன் வாசகம்.

கல்வி கற்றுப் புலவனுக விளங்கிய இந்தப் பாண்டியன் போர்க்களத்தில் பகைவரை வென்று புகழ் பெற்று விளங் கினுன். அந்த வெற்றியின் காரணமாக இவன் "ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்" என்று சிறப்புப்பெயர் பெற்ருன். அரசுச் செல்வமும், கல்விச் செல்வமும் கைவரப் பெற்ற இந்தப் பாண்டியன் ஆய்ந்தோய்ந்து பாராமல் அவ சரப்பட்டுக் கோவலனைக் கொன்ற தவற்றின் காரணமாகக்

கண்ணகி இவன்மீது தொடுத்த வழக்கில் தோற்றுத் தான் செய்தது தவறு என்று கண்டபோது மனம் பதறித் தான் நடத்தியது கொடுங்கோல் என்பதை அறிந்து நெஞ்சம் பதறிச் சிம்மாசனத்திலேயே உயிரை விட்டான். இவன் அரசு கட்டிலில் (சிம்மாசனத்தில்) இருந்து உயிர்விட்டபடியால் ''அரசு கட்டிலில் துஞ்சிய நெடுஞ்செழியன்'' என்றும் பெயர் பெற்ருன். இஃது இவன் இறந்த பிறகு பெற்ற பெயர்.

நெடுஞ்செழியன் ஆரியப்படையை வென்ருன் என்று கூறப்படுகிருன். ஆரியப்படை இவன்மேல் படையெடுத்து வந்ததா? இவன் ஆரியப் படையின்மேல் போருக்குச் சென்ருனு? ஆரியப்படை என்ருல் என்ன? இவை பற்றி ஆராய வேண்டியது சரித்திரம் அறிவதற்கு முதன்மையானது.

சங்க காலத்துத் தமிழர் பாரதநாட்டை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்திருந்தார்கள். அவை தமிழகம் (தமிழ்நாடு), வடுக நாடு, ஆரிய நாடு என்பவை. தமிழ் நாட்டுக்கு வடக்கே இருந்தது வடுக நாடு. அது தமிழ்நாட்டின் வட எல்லையி லிருந்து வடக்கே விந்தியமலே வரையில் பரவியிருந்தது. வடுக நாடு மேற்கே அரபிக் கடல் முதல் கிழக்கே வங்காளக் குடாக்கடல் வரையில் நீண்டிருந்தது. வடுக நாட்டின் மேற்குப் பகுதியைக் கன்னடரும் கிழக்குப் பகுதியைக் கலிங்கரும் (ஆந்திரரும்) ஆட்சி செய்தனர். கன்னட நாடும் ஆந்திர நாடும் சேர்ந்ததே வடுக நாடு. கன்னடரும், ஆந்திரரும் வடவர் அல்லது வடுகர் என்று பெயர் பெற்றனர்.

வடுக நாட்டுக்கு அப்பால் (விந்திய மலேக்கு வடக்கே) இருந்தது ஆரிய நாடு. அது வடஇந்தியா முழுவதும் அடங்கியிருந்தது. ஆரிய நாட்டிலே இருந்தவர் ஆரியர். ஆரிய நாட்டிலிருந்த படை ஆரியப்படை.

கடைச்சங்க காலத்திலும் அதற்கு முந்திய காலத்திலும் வடமேற்கு இந்தியாவில் சில கூட்டத்தார் வாழ்ந்து வந்தார்கள் அந்தக் கூட்டத்தாரில் யௌத்தேயர், அர்ச்சுனீயர் என்னும் பிரிவினர் முக்கியமானவர். இவர்களுடைய தொழில் போர் செய்வது. யுத்தம் (போர்) செய்வதை வாழ்க்கையாகக் கொண்டவர் யௌத்தேயர். அர்ச்சுனீயர் என்பவர் அர்ச்சுனன் வழியில் வந்த போர் வீரர். இவர்களுக்கு அரசன் இல்லே. இவர்கள் கூட்டங்கூட்டமாக வசித்து வந்தனர். தங்களுக்குள் ஒரு தலேவனேத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். யாரேனும் அரசன் இவர்களேத் துணேக்கு அழைத்தால் அவனேச்

சார்ந்து அவனுடைய பகைவனுடன் போர் செய்வது இவர்களுடைய தொழில். சில சமயங்களில் இவர்கள் கூட்டமாக வேறு நாட்டுடன் போர் செய்வதும் உண்டு. யௌத்தேய கணம் (கணம்-கூட்டம்) தமிழ்நாட்டின் மேல் அடிக்கடி போருக்கு வந்தது. யௌத்தேய கணத்தைச் சங்ககாலத் தமிழர் ஆரியப்படை என்று பெயரிட்டழைத்தனர். வடுக நாட்டுக்கு அப்பால் ஆரிய நாட்டிலிருந்து வந்தவர் ஆகையால் அவர்கள் ஆரியப்படை என்று பெயர் பெற்றனர். ஆரியப் படை (யௌத்தேய கணம்) யின் வரலாற்றை நான் எழுதிய கட்டுரையில் காண்க. (ஆரியப்படையும் யௌத்தேய கணமும். பக்கம் 128-134, கல்வெட்டுக் கருத்தரங்கு. 1966.)

அகநானூறு 386ஆம் செய்யுளில் கூறப்படுகிற ஆரியப் பொருநன், ஆரியப் படையைச் சேர்ந்தவன் என்று தோன்றுகிறன். சோழ நாட்டு வல்லத்துக் கோட்டை மேல் ஆரியப்படை வந்து முற்றுகையிட்டபோது அக்கோட்டையிலிருந்த சோழன் அவ்வாரியப்படையை வென்று துரத்தினன். ஆரியப்படை உடைந்து ஓடிற்று. இதனை அகநானூறு 336ஆம் செய்யுளினுல் அறிகிருேம். பாண்டியன் நெடுஞ்செழியன் காலத்தில் ஓர் ஆரியப்படை போர் செய்ய மதுரைக்கு வந்ததையும் அப்படையை அவன் வென்று துரத்தியதையும் சிலப்பதிகார மதுரைக்காண்டம் கட்டுரைச் செய்யுளினுலும், புறநானூறு 183ஆம் செய்யுளின் அடிக்குறிப்பினுலும் அறிகிருேம்.

இவ்வளவு சிறந்த வீரனும் அறிஞனும் புலவனுமாக இருந்த இந்தப் பாண்டியன், மகளிர்மாட்டு வேட்கையுடையனைச் சிற்றின்பப் பிரியனுக இருந்தான் என்பதை இவனுடைய சமகாலத்தில் வாழ்ந்தவரான இளங்கோவடிகள் (சேரன் செங்குட்டுவனுடைய தம்பியார்)கூறுகிருர். சிலப்பதிகாரம் கொலைக்களக் காதையில் இதனை இவர் கூறுகிருர்:

''கூடல் மகளிர் ஆடல் தோற்றமும்
பாடற் பகுதியும் பண்ணின் பயங்களும்
காவலன் உள்ளம் கவர்ந்த வென்றுதன்
ஊடல் உள்ளம் உள்கரந் தொளித்துத்
தலைநோய் வருத்தம் தன்மேல் இட்டுக்
குலமுதற் றேவி கூடா தேக
மந்திரச் சுற்றம் நீங்கி மன்னவன்
சிந்தரி நெடுங்கண் சிலதியர் தம்மொடு
கோப்பெருந் தேவி கோயில் நோக்கிக்
காப்புடை வாயிற் கடைக்கா ணகவயின்.'' (வரி,131-140)

இச் செய்தியையே இளங்கோவடிகள் கட்டுரை காதையில் மதுராபதி தெய்வத்தின் வாயிலாக மீண்டும் கூறுகிறார். பாண்டியன் கல்வி கற்றுப் புலமை வாய்ந்தவனாக இருந்தும், மனத்தை அடக்காமல் சிற்றின்பத்தில் நாட்டஞ் செலுத்தினான் என்றும், ஆனாலும் இவ்வொழுக்கம் அரசகுடியில் பிறந்த இவனுக்கு இழுக்காகாது என்றும் மதுராபதி கூறிய தாக இளங்கோவடிகள் கூறுகிறார்:

''நன்னுதல் மடந்தையர்
மடங்கெழு நோக்கின் மதமுகந் திறப்புண்டு
இடங்கழி நெஞ்சத் திளமை யானை
கல்விப் பாகன் கையகப் படாஅது
ஒல்கா வுள்ளத் தோடும் ஆயினும்
ஒழுக்கொடு புணர்ந்த இவ்விழுக்குடிப் பிறந்தோர்க்கு
இழுக்கந் தாராது.'' (கட்டுரைகாதை, 35-41.)

இந்த நெடுஞ்செழியனிடத்தில் இன்னொரு குறைபாடும் இருந்தது. அஃது அரசர்மாட்டிருக்கக் கூடாத குறைபாடு. நீதி விசாரணைகளை இவன் பொறுப்பேற்று நடத்தாமல் தன் கீழ்ப்பட்ட அதிகாரிகளிடம் விட்டு விட்டான். அதனால், அவர்கள் தம்முடைய விருப்பம்போல் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புக் கூறினார்கள். அவர்கள் செய்த பிழைபட்ட தவறான தீர்ப்பு இவ்வரசனுக்குக் கெட்ட பெயரை யுண்டாக்கிற்று. இச் செய்தியையும் இளங்கோவடிகளே கூறுகிறார். இதனை விளக்கிக் கூறுவோம்.

பாண்டியன் நெடுஞ்செழியன் காலத்தில் சேர நாட்டில் இருந்தவன் பல்யானைச் செல்கெழுகுட்டுவன். இந்தக் குட்டுவனைப் பதிற்றுப்பத்து மூன்றும்பத்தில் பாடியவர் பாலைக் கௌதமனார். அவருக்குக் குட்டுவன் பெருஞ் செல்வங் கொடுத்ததை யறிந்த சோழ நாட்டுப் பார்ப்பான் பராசரன் என்பவன், அவனிடஞ் சென்று வேத பாராயணஞ் செய்து பொன்னையும் மணியையும் பரிசாகப் பெற்றுக்கொண்டு திரும்பி வரும் வழியில் பாண்டி நாட்டுத் தண்கால் (திருத்தண்கால்) என்னும் ஊரில் வந்து அரச மரத்தடியில் இளைப்பாறினான். அப்போது அவ்வூர்ப்பார்ப்பனச்சிறுவர் அவனிடஞ் சென்றனர். பராசரன் அவ்விளைஞர்களை அழைத்துத் தன்னுடன் வேதம் ஓதும்படி கூறினான். அவ்விளைஞர்களில் தக்கிணன் என்னும் சிறுவன் பிழையில்லாமல் வேதம் ஓதியபடியால், பராசரன் தக்கிணனுக்கு முத்துப் பூணூலையும் பொன் கடகத்தையும்

பரிசாகக் கொடுத்தான். பிறகு அவன் தன் சோழ நாட்டுக்குப் போய் விட்டான்.

முத்துப் பூணூலையும் பொற் கடகத்தையும் பரிசாகப் பெற்ற தக்கிணன் என்னும் சிறுவன் அவற்றை அணிந்து கொண்டான். அதனைக் கண்டு பொறாமை கொண்ட அவ்வூர்ப் பார்ப்பனர், தக்கிணனுடைய தந்தையான வார்த்திகன் என்னும் பிராமணன் இந்த நகைகளை எங்கிருந்தோ திருடிக் கொண்டு வந்தான் என்று ஊர் அதிகாரிகளிடம் கூறினார்கள். பாண்டியன் நெடுஞ்செழியனுடைய அந்த ஊழியர்கள், தீர விசாரியாமல் நகைகளைப் பிடுங்கிக்கொண்டு வார்த்திகனைச் சிறையில் அடைத்தார்கள். வார்த்திகன் அந் நகைகளைக் களவாடியிருக்க வேண்டும், அல்லது அவனுக்குப் புதையல் கிடைத்திருக்க வேண்டும். களவு செய்தது குற்றம். புதையல் கிடைத்திருந்தால், அதை அரசாங்கத்தில் சேர்க்காமல் போனது குற்றம் என்று அவர்கள் தீர்ப்புக் கூறினார்கள்.

வார்த்திகன் மனைவி கார்த்திகை என்பவள் வருந்தி அழுதாள். அப்போது அவ்வூர் ஐயை (கொற்றவை) கோவிலின் கதவு திறவாமல் மூடிக்கொண்டது. இச் செய்தி அரசன் செவிக்கு எட்டியது. பாண்டியன், தண்காலில் இருந்த அரச ஊழியர்களை யழைத்து விசாரித்தான் அப்போது முத்துப் பூணூலின் வரலாறு தெரிந்தது. அரசன் வார்த்திகனை விடுதலை செய்து தன் ஊழியர் அநீதி செய்ததற்குத் தண்டமாக அவனுக்கு வயலூரில் நிலத்தைத் தானஞ் செய்தான். பிறகு கொற்றவைக் கோயில் கதவு திறந்து கொண்டது. இச் செய்திகளைக் கட்டுரைகாதை (வரி, 61-131)யில் காண்க. இதனால், இவன் நீதி விசாரணையில் கண்டிப்பாக இராமல் தன் கீழ்ப்பட்ட ஊழியரிடத்தில் அதிகாரத்தை விட்டிருந்தான் என்பது தெரிகின்றது. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு பொது மக்களுக்கு இவன்மீது நம்பிக்கை போய் விட்டது. ஒரு சோதிட வார்த்தையும் உலவ ஆரம்பித்தது. அது,

> ''ஆடித் திங்கள் பேரிருள் பக்கத்து
> அழல்சேர் குட்டத்து அட்டமி ஞான்று
> வெள்ளி வாரத்து ஒள்ளெரி யுண்ண
> உரைசால் மதுரையோ டரைசு கேடுறும்''
>
> (கட்டுரை. 133 - 136)

என்பது.

வழக்கு விசாரணைகளைச் சரிவரச் செய்யாமல் போனது இவனுடைய உயிருக்கே ஆபத்தாக முடிந்து விட்டது.

பாண்டிமாதேவியின் பொற்சிலம்பைத் திருடின கள்ளன் தன்னிடம் இருக்கிறான் என்று பொற்கொல்லன் பாண்டியனிடம் கூறியபோது, பாண்டியன் அதனை நன்றாக விசாரணை செய்யவில்லை. அல்லது, தக்க பொறுப்புள்ள அதிகாரியிடத்தில் ஒப்படைத்து விசாரிக்கச் செய்யவும் இல்லை. அவன் தன் கடமையைச் செய்யாமல் தவறினான். இஃது அவனுடைய இயற்கை. பொற்கொல்லனுடைய வார்த்தையை அவன் முழுவதும் நம்பினான். விசாரணை செய்யாமலே, ஊர் காப்பாளரை அழைப்பித்து,

> "தாழ்பூங் கோதை தன்காற் சிலம்பு
> கன்றிய கள்வன் கைய தாகில்
> கொன்றச் சிலம்பு கொணர்க ஈங்கு"

என்று கட்டளை யிட்டான். இந்தச் சோர்வு இவன் உயிருக்கே ஆபத்தாக முடிந்தது. இவன்மீது கண்ணகி வழக்குத் தொடுத்து வழக்காடிய போது, இவ்வரசன் தான் செய்தது பிழை என்பதை அறிந்தான். அறிந்து அரசு கட்டிலிலேயே உயிர் விட்டான்.

ஆரியப்படை கடந்த, அரசு கட்டிலில், துஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியனின் இந்த வரலாறுகளை யெல்லாம் சிலப்பதிகாரத்திலிருந்து அறிகிறோம். இவனுடைய சமகாலத்திலிருந்த சேர அரசர்கள், இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனும் அவன் தம்பியான பல்யானைச் செல்கெழுகுட்டுவனும், சேரன் செங்குட்டுவனும் ஆவர். கொங்கு நாட்டில் சேரரின் இளைய வழியைச் சேர்ந்த மாந்தரஞ்சேரல் (செல்வக் கடுங்கோவாழியாதன்) அரசாண்டிருந்தான். சோழ நாட்டில் இருந்தவன் வடிவேற்கிள்ளி. தொண்டை நாட்டைக் காஞ்சியிலிருந்து அரசாண்டவன் வடிவேற்கிள்ளியின் தம்பியான இளங்கிள்ளி. இவர்கள் எல்லோரும் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர்கள்.

இந்தப் பாண்டியன் நெடுஞ்செழியனைப்பற்றித் திரு. ச. வையாபுரிப் பிள்ளை அவர்கள் ஓரிடத்தில் சரியாகவும் வேறோரிடத்தில் தவறாகவும் எழுதியிருக்கிறதைச் சுட்டிக்காட்ட வேண்டி யிருக்கிறது. 1940ஆம் ஆண்டில் சைவசித்தாந்த சமாசம் வெளியிட்ட சங்க இலக்கியம் (எட்டுத் தொகையும் பத்துப்பாட்டும்) என்னும் நூலின் பதிப்பாசிரியராக இருந்தவர் திரு. வையாபுரிப் பிள்ளை அவர்கள். அந்த நூலில், ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் என்னுந் தலைப்பில், இவன்

பாடிய புறம் 183ஆம் செய்யுளைப் பிள்ளையவர்கள் பதிப்பித் திருக்கிறார்கள். ஆனால், பிள்ளையவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய 'தமிழ்மொழி தமிழ் இலக்கிய வரலாறு' என்னும் நூலில் 145ஆம் பக்கத்தில் இந்தப் பாண்டியனைச் சந்தேகிக் கிறார். (இந்த ஆங்கில நூல் 1956ஆம் ஆண்டில் இவர் காலஞ் சென்ற பிறகு அச்சிடப்பட்டது). இந்த அரசன் உண்மையில் உயிர் வாழ்ந்திருந்தானா என்று இவர் ஐயப்படு கிறார். சங்க இலக்கியத்தை அச்சிட்டபோது இவருக்கு இல்லாத ஐயம் பிற்காலத்தில் இவருக்கு எப்படி ஏற்பட்டது! இந்தப் பாண்டியன் கற்பனைப் புருஷன் என்றால், இவன் பாடிய செய்யுள் எப்படிப் புறநானூற்றில் தொகுக்கப்பட் டிருக்கும்?

ஆனால், வையாபுரிப் பிள்ளையின் நண்பரும் தமிழ் நூல் களும் தமிழ் நாட்டுச் சரித்திரங்களும் பிற்காலத்தவை என்று கூறுகிறவருமான திரு கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி இந்தப் பாண்டியனைப்பற்றி ஐயப்படவில்லை. இந்தப் பாண்டியன் உண்மையில் வாழ்ந்திருந்தவன் என்றும் புறநானூற்று 183ஆம் செய்யுளைப் பாடியவன் என்றும் சேரன் செங்குட்டு வனின் சமகாலத்திலிருந்தவன் என்றும் கோவலனைத் தவருகக் கொன்று அந்தத் தவற்றைப் பிறகு அறிந்து சிம்மா சனத்திலிருந்தபடியே உயிர் விட்டவன் என்றும் சாஸ்திரியார் எழுதுகிறார். (P. 524, 544. A Comprehensive History of India. Vol. 2. 1957).

ஆரியப்படை கடந்த, அரசு கட்டிலில் துஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியனுக்குப் பிறகு அவனுடைய தம்பியான வெற்றி வேற் செழியன், கொற்கையில் இளவரசனாக இருந்தவன், மதுரைக்கு வந்து அரசாண்டான். அவனுக்குப் பிறகு பாண்டி நாட்டை யரசாண்டவன் தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்.

---

## வரலாறு

*வரலாறு என்பது ஒரு மாபெரும் நாடகக் காட்சி; காலமே அதன் மேடை; பொன்றா மெய்ம்மையே அதன் பின்னணித்திரை; பகலவன் ஒளியே அம்மேடையின் விளக்கங்கள்.*

—கார்லைல்

# சங்க இலக்கியத்தில் நாரையும் கொக்கும்

[பி. எல். சாமி, பி.எஸ்.ஸி.,]

(Grey Heron and Pond Heron)

**நாரை :—**

தற்காலம் பெரும்பாலும் யாவருக்கும் தெரிந்த நீர்ப் பறவைகளான நாரையும், கொக்கும் சங்க நூல்களில் பல பாடல்களில் கூறப்படுகின்றன. பறவை நூற்படி நாரையும் கொக்கும் எவை என்று அறியவேண்டும். பிற்காலத்தில் உரையாசிரியர்கள் நாரையும் கொக்கும் ஒரேவகைப் பறவையைக் குறிப்பதுபோல் மயங்கி உரையெழுதியுள்ளனர். பறவை நூற்படி நாரையும் கொக்கும் ஒரே இனப் பறவை களாயினும் (Herons) வெவ்வேறு பறவைகளாகும். நாரை என்ற பெயர் சங்க நூல்களில் தனியாக ஒருவகைப் பறவையைக் குறித்து வழங்கிற்று. ஆனால், அதே பெயர் செவ்வரி நாரை, பெருநாரை, செங்கால் நாரை என்ற பெயர்களில் பொதுப் பெயராகவும், இனப்பெயராகவும் வழங்கினதையும் காண கிறோம். நாட்டு மக்களிடையே நாரை என்ற பெயர் இன்றும் வழங்குவதால் இந்தப் பறவை எதுவென்று எளிதில் கண்டு கொள்ள முடியும். சாம்பல் நாரையென்று பல இடங்களில் இந்த நாரையை அழைப்பர். இந்த நாரையைக் கண்டு கொள்ள சாம்பல் நிற உடல்தான் முக்கிய அடையாளம். அதனால் இப் பறவையை ஆங்கிலத்திலும் Grey Heron என்று சாம்பல் நிறப்பெயரை அடைகொடுத்து வழங்குகின்றனர். இதை நரையான், நாராயன் என்றும் சில இடங்களில் அழைப்பார். வேடந்தாங்கலில் நாராயணப் பட்சி யென்றும் அழைக்கின்றனர். தெலுங்கிலும் இப்பெயர் காணப்படு கின்றது. நாரையென்ற பெயரே நாராயன் என்று மாறி யுள்ளது. மடையான் என்று ஒரு பறவைப் பெயர் வழங்குவது போல் இப்பெயர் தோன்றியிருக்கலாம். இந்தப்பெயர் நாட்டு மக்கள் வாயில் நாராயணப்பட்சியாக மாற்றுருவம் எய்திற்று. நாராயணனுக்கும் நாரைக்கும் எந்தவகைத் தொடர்பும் இல்லை. நாரையென்ற பெயரே "நரை" என்ற சொல்லிலிருந்து தோன்றியிருக்கலாம். நரை என்ற சொல் சாம்பல் கலந்த வெள்ளை நிறத்தைக் குறித்துச் சங்ககாலத்தில் வழங்கிற்று. நரைமயிர் என்ற வழக்கைக் காண்க. நரை நிறமுடைய (Grey) பறவையை நரையான், நாரை என்றழைத்தனர் என்று

கருத வேண்டும். நரையான் என்ற பெயர் நரை நிறமுடைய மாட்டைக் குறிப்பிடுவதுபோல் நாரை என்ற பெயரும் வழங்கிற்று.

நாரையை நீர் நிலைகளில்—முக்கியமாக—கடற்கரைக் கழி களில் எளிதில் பார்க்கலாம். நெட்டையான சாம்பல் நிறமான பறவையாகும். தலையும் கழுத்தும் வெண்மையாகக் காணப் படும். உடல் சாம்பல் நிறமாகத் தெரியும்; பெரும்பாலும் தனியாக நிற்கும். சிறு கூட்டமாகவும் நீர்நிலைகளில் காண்ப துண்டு. நீண்ட கால்களும் நீண்ட கழுத்தும் இந்தப் பறவையை நெட்டையாகக் காட்டுகின்றது.

"அடும்பவிழ் அணிமலர் சிதைஇமீ னருந்தும்
தடந்தா ணாரை யிருக்கு மெக்கர்த்
தண்ணந் துறைவற் றொடுத்து நந்நலம்" —குறுந். 349.

"கடல்சேர் கானற் குடபுல முன்னிக்
கூவற் றுழந்த தடந்தா ணாரை
குவியிணர் ஞாழன் மாச்சினைச் சேக்கும்" —பதிற். 51 : 3-5

"முடந்தை நெல்லின் விளைவயற் பரந்த
தடந்தா ணாரை யிரிய வயிரைக்
கொழுமீ ணார்கைய மரந்தொறுங் குழாஅலின்"
—பதிற். 29 : 3-5.

"தடந்தா ணாரை படிந்திரை கவரும்
முடந்தை நெல்லின் கழையமல் கழனிப்"
—பதிற். 32 : 12-13.

தடந்தாள் நாரையென்று இந்த நாரை அழைக்கப்படுவதைக் காணலாம். வளைந்த காலையுடைய நாரை என்று உரை கூறி யுள்ளனர். ஆனால், தட என்ற சொல் பெருமைப் பொருளு முடையதால் பெரிய காலையுடைய நாரை என்று பொருள் கொள்வதே பொருத்தமானது.

"இருங்கழி துழைஇய ஈர்ம்புற நாரை
இறகெறி திவலையிற் பனிக்கும் பாக்கத்து" —நற்றிணை. 127.

"பழனப் பாகல் முயிறுமூசு குடம்பை
கழனி நாரை உரைத்தலிற் செந்நெல்" —நற்றிணை. 180.

"....................இரைவேட்டுக்
கடுஞ்சூல் வயவொடு கானலெய் தாது
கழனி ஒழிந்த கொடுவாய்ப் பேடைக்கு
முடமுதிர் நாரை கடல்மீன் ஒய்யும்" —நற்றிணை. 263

"பழனப் பன்மீ னருந்த நாரை" —ஐங்குறுநூறு. 70.

'ஆர லருந்த வயிற்ற
நாரை மிதிக்கு மென்மக ளுதலே" —குறுந்தொகை. 114.

"குணகடற் றிரையது பறைதபு நாரை
திண்டேர்ப் பொறையன் றொண்டி முன்றுறை
அயிரை யாரிரைக் கணவந் தாங்குச்" —குறுந்தொகை. 128.

"தண்கடற் படுதிரை பெயர்த்தலின் வெண்பறை
நாரை நிரைபெயர்ந் தயிரை யாரும்
ஊரோ நன்றுமன் மரந்தை" —குறுந்தொகை. 166.

"பொய்கை நாரை போர்விற் சேக்கும்
நெய்தலங் கழனி நெல்லரி தொழுவர்" —புறம். 209.

"வயலமர் கழனி வாயிற் பொய்கைக்
கயலார் நாரை யுகைத்த வாளை" —புறம். 354.

நாரைகளைக் கடற்கரைக் கழிகளிலும் பொய்கைகளிலும், மருத நிலத்துக் கழனிகளிலும், பழனங்களிலும் கண்டு பாடியுள்ளனர். கழனி நாரை, பழன நாரை என்றுமழைக்கின்றனர். நாரைகள் அயிரை, கயல், வாளை, இரு முதலிய பல மீன்களையும் உண்பதாகச் சொல்லி யிருக்கின்றனர். நற்றிணை 91 ஆம் பாடலில் நாரை சிறிய கண்ணையுடைய சிவந்த வால் பாகத்தையுடைய சிறு மீனைத் தின்றதாகக் கூறியுள்ளதைக் காணலாம். நாரை எந்த மீனைத் தின்கின்றது என்பதைக்கூட நுண்ணிதாகக் கண்டு கூறியுள்ளனர் என்பது தெரிகின்றது. நாரைகள் கூடுகட்டி வாழ்வதும் குஞ்சுகளுக்கு இரை தேடித் தருவதும் சங்க நூல்களில் கூறப்பட்டுள்ளன.

"செவ்வீ ஞாழல் கருங்கோட் டிருஞ்சினைத்
தனிப்பார்ப்பு உள்ளிய தண்பறை நாரை
மணப்பூ நெய்தல் மாக்கழி நிவப்ப" —அகம். 240.

"இனமீன் அருந்தும் நாரையொடு பனைமிசை
அன்றில் சேக்கும் முன்றிற் பொன்னென" —அகம். 360.

"பாடுநர்த் தொடுத்த கைவண் கோமான்
பரியுடை நற்றேர்ப் பெரியன் விரியிணர்ப்
புன்னையங் கானற புறந்தை முன்றுறை
வம்ப நாரை யினமொலித் தன்ன" —அகம். 100.

"பொதும்பில் புன்னைச் சினைசேர்பு இருந்த
வம்ப நாரை இரிய ஒருநாள்" —அகம். 190.

*"நின்ற புன்னை நிலந்தோய் படுசினை*
*வம்ப நாரை சேக்கும்*
*தண்கடற் சேர்ப்பநீ யுண்டவென் னலனே"* —குறுந். 236.

*"வாடை தூக்க வணங்கிய தாழை*
*யாடுகோட் டிருந்த வசைநடை நாரை"* —கலித். 128.

நாரை புன்னை மரத்திலும், பனைமரத்திலும், ஞாழல் மரத்திலும், கடற்கரை யோரத்தில் தங்குவதாகக் கூறியுள்ளனர். நாரைகள் மருத நிலத்தில் மருத மரத்திலும் பலா மரத்திலும் கூடுகட்டுவதாகவும் கூறியுள்ளனர். பொறையாற்றில் புன்னையங்கானலில் கடற்கரை முற்றத்தில் வம்ப நாரைகள் இனமாக ஒலித்ததாக அகநானூற்றுப் பாடல் (100) கூறுவது கவனிக்கத் தக்கதாகும். இந்த நாரைகள் உள்நாட்டில் வேறிடத்திலிருந்து வந்து இருக்கலாம், அல்லது வெளிநாடுகளான மலேயா முதலிய இடங்களிலிருந்தும் வந்திருக்கலாம் "வம்ப நாரை சேக்கும்" என்று குறுந்தொகை கூறுவதால் அவை புதியனவாக வந்து தங்கியிருந்தனவென்று தெரிகின்றது.

*"பாடிமிழ் பனிக்கடல் துழைஇப் பெடையோடு*
*உடங்கிரை தேருந் தடந்தாள் நாரை*
*ஐய சிறுகண் செங்கடைச் சிறுமீன்*
*மேக்குயர் சினையின் மீமிசைக் குடம்பைத்*
*தாய்ப்பயிர் பிள்ளை வாய்ப்படச் சொரியும்*
*கானலம் படப்பை ஆஉ வண்மகிழ்ப்"* —நற்றிணை. 91.

*"கழனி யாரல் கவுளகத் தடக்கிப்*
*பழன மருதிற் பார்ப்புவாய் சொரிந்து*
*கருங்கா ஞரை நரன்றுவந் திறுப்பத்"* —பெருங். 7 : 29-31.

நாரை தன் பெடையோடு இரை தேடுவதையும், மேலேயிருந்த உயர்ந்த கிளைகளில் கட்டிய கூட்டில் இருந்து தாயைக் கூப்பிடும் பிள்ளைகளுக்கு வாயில் இரையைச் சொரிந்ததையும் கூறியுள்ளதைக் கவனிக்க வேண்டும். நாரை தன் பெடையோடு கூடு கட்டுவதும் இரை தேடுவதும் இரையைக் குஞ்சுகளுக்கு ஊட்டுவதும் பறவை நூலார் கூறியுள்ளனர். நாரையின் குஞ்சுகள் கத்திக்கொண்டே நாரையின் அலகைக் கவ்வி இரை கேட்குமெனக் கூறுவர். நாரையின் அலகிலிருந்து நேராகவே குஞ்சுகள் தங்கள் வாயில் இரையைப் பெறுவது வழக்கம் என்றும் கூறுவர். நாரை பெரிய பறவையாயினும் கனமற்றதாகையால் உச்சியில் உள்ள மெல்லிய கிளைகளில் கூட அமரமுடியும் என்று பறவை நூலார் கூறுவர். 'கழனி

மருதின் சென்னி சேக்கும்' என்று ஐங்குறுநூறு கூறுவதைக் காணலாம்.

நாரை மீனைப் பிடித்து உண்பதைப் பற்றியும் பறவை நூலார் கவனித்து எழுதியுள்ளனர். ஆடாது அசையாது நீர் நிலையருகில் நின்றுகொண்டே யிருக்கும். தன்னுடைய மூக்கினுல் குத்திப் பிடிக்கக்கூடிய தூரத்தில் ஏதாவது மீன் வந்தால் உடனே கழுத்தை நீட்டிப் பிடிக்கும். சங்கப் பாடல் ஒன்று நாரை மீன்பிடிக்கும் வழியை அழகாக விளக்கியுள்ளது.

''நீளிரும் பொய்கை யிரைவேட் டெழுந்த
வாளை வெண்போத்து உணீஇய நாரைதன்
அடியறிவு உறுதல் அஞ்சிப் பைப்பயக்
கடியிலம் புகூஉங் கள்வன் போலச்
சாஅய் ஒதுங்குந் துறைகேழ் ஊரனொடு'' —அகம். 276.

பொய்கையில் வாளை மீனை உண்ணப்போன நாரை தன் அடிகளின் ஓசையை மீன்கள் உணர்ந்து கொள்ளுமென்று அஞ்சி மெதுமெதுவாக அடியெடுத்து வைத்துச்செல்லு மென்று அகநானூறு கூறுவது உண்மை நிகழ்ச்சியை அப்படியே கண்டு படம் பிடித்ததுபோல் உள்ளது. டாக்டர் சலீம்அலி என்ற பறவைநூல் அறிஞர் இதேபோல நாரை வேட்டையாடுவதைப்பற்றிக் கூறியுள்ளதைக் காணலாம். (Sometimes the bird will stalk its prey stealthily or shift to a new vantage point, lifting up and putting down each foot noiselessly and with studied deliberation). சலீம் அலி அவர்கள் நாரை திருட்டுத்தனமாகத் தனது இரையைப்பிடிக்க நடந்து செல்வதை வர்ணித்துள்ளார். ஓசை கேட்காதபடி எப்படிக் கால்களை எடுத்து வைக்குமென்றும் விளக்கியுள்ளார். அகநானூறும் காப்புடைய இல்லத்தில் திருடப்போகும் கள்வனைப்போல் அடியோசை கேட்பதற்கு அஞ்சி மெல்ல மெல்ல நாரை நடக்கும் என்று கூறியிருப்பதைக் கவனிக்க வேண்டும். பெரிய திருமொழியில் 'கள்ளநாரை' என்று அழைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

தடந்தாள் நாரைக்கு மூங்கிலின் உள்ளே காணப்படும் மென்மையான தொலியைப் பிசைந்தாற்போன்ற பொருள் உள்ள தூவியிருப்பதாக நற்றிணை கூறியுள்ளது அரிய, நுட்பமான செய்தியாகும்.

''ஆடமை ஆக்கம் ஐதுபிசைந்து அன்ன
தோடமை தூவித் தடந்தாள் நாரை

நலனுணப் பட்ட நல்கூர் பேடை
கழிபெயர் மருங்கின் சிறுமீன் உண்ணாது
கைதையம் படுசினைப் புலம்பொடு வதியும்'' —நற். 178.

நாரைக்கும் அதன் இனமான பறவைகளுக்கும்(Herons)மார்புப் பக்கத்திலும், பின் பக்கத்திலும் இறகுகளில் மிகச்சிறிய நுண்ணிய தூவிகள் உள்ளன. இவைகளிலிருந்து மென்மையான பொடி அல்லது தூள் வெளியாகின்றது. இந்தத் துய்ப் பொடிகளைத் (Powder-down) தெளித்து நாரை தனது கலைந்த நனைந்த இறகுகளைக் கோதி உலர்த்திக்கொள்ளும் என்று பறவை நூலார் கூறுவர். (On the sides of the breast and rump of the herons and egrets the birds of the family have concealed under the feathers, patches of peculiar, specialised feathers known as 'Powder-down' which give off a powdery substance used in preening their feathers). சேவலின் சேர்க்கையால் நலனுணப்பட்ட பெண் நாரை கலைந்த தனது தோடமை தூவியை மூங்கிலின் தொலி ஐது பிசைந்தது போன்ற பொடியால் உலர்த்திக் கொண்டதாக நற்றிணைப் பாடல் கூறியுள்ளது. நாரையின் குரலை ''கனைகுரல்'' என்றும், பிளிறும் குரல் என்றும் கூறியுள்ளனர்.

''தண்ணுமை வெரீஇய தடந்தாள் நாரை
செறிமடை வயிரிற் பிளிற்றிப் பெண்ணை
அகமடற் சேக்குந் துறைவன்'' —அகம் 40.

''கதிர்த்ததண் பூணி கம்புடாழ் பீலிக்
கனைகுர னுரைவண் டானம்'' —சீவகசிந்தாமணி. 2108

சிறு சின்னம் போலும் செறிந்த குரலையுடைய நாரையென்று சீவகசிந்தாமணி கூறுகின்றது. இது போன்றதொரு குரலையுடையதென்றே (Resonant quaarnk) பறவை நூலாரும் எழுதியுள்ளனர். நாரைகள் நரலும் (croak) என்றும் கூறியுள்ளனர்.

சாம்பல் நாரையைப் போலவே செந்நாரை யென்னும் ஒரு பறவை தமிழ்நாட்டில் காணப்படுகின்றது. இதையும் சங்க நூல்களில் சில பாடல்கள் குறிப்பிடுகின்றன என்று கருத இடமுண்டு.

''காணிய சென்ற மடநடை நாரை
பதைப்ப வொழிந்த செம்மறுத் தூவி''
—ஐங்குறுநூறு 156.

"சிறுமீன் கவுட்கொண்ட செந்தூவி நாராய்
இறுமென் குரலநின் பிள்ளைகட்கே யாகி"
—ஐந். எழுபது. 68

செம்மறுவுடைய தூவியுடைய நாரை, செந்தூவியுடைய நாரை யென்று கூறுவதால் உடலில் பெருமளவு சாம்பல் நிறமாகவும் சிறிதளவு செம்மை நிறமாகவும் மார்பில் காணப்படும் செந் நாரை என்று கொள்ளவேண்டும். மறுப்போலச் சிறிது சிவந்த நிறமுடைய தூவிகளையுடையது இந்தச் செந்நாரையேயாகும். உருவிலும் பழக்க வழக்கத்திலும் சாம்பல் நாரையைப்போலவே செந்நாரை இருக்கும். சாம்பல் நாரையை (Eastern grey heron) என்று ஆங்கிலத்தில் அழைப்பர். இதன் அறிவியற் பெயர் (Ardea Cinerea rectirostris) என்பதாகும். செந் நாரையை ஆங்கிலத்தில் (Eastern purple Heron) என்றழைப் பர். மலையாளத்தில் நாரையைச் 'சாரமூண்டி' என்றழைப் பர். சார நிறம் சாம்பல் நிறத்தைக் குறிக்கும். செந்நாரை யைத் தெலுங்கில் "எர்ர நாராயண பக்சி" என்றழைப்பர். மலையாளத்தில் நாரைக்கும் இதன் இனமான பறவைகளுக்கும் வழங்கும் 'மூண்டி' என்ற சொல் தமிழிலோ பிற திராவிட மொழிகளிலோ காணப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. பிற மொழிகளிலும் இப்பெயர் இல்லை.

கொக்கு :

கொக்கு என்ற பறவையை நாட்டு மக்கள் நன்கு அறிவர். இதைக் குளக்கொக்கு என்றும், நுள்ளைமடையான் என்றும் குருட்டுக்கொக்கு என்றும் அழைப்பர். கொக்குப் போல வெள்ளை என்று ஒப்பிடுவதுண்டு. ஆனால் கொக்கு முற்றிலும் வெள்ளை நிற முடையதல்ல. வெள்ளைக் கொக்கு என்றழைக் கப்படும் வெண்குருகுகள் உடல் முழுவதும் தூய வெள்ளை யாகக் காணப்படும். ஆனால், கொக்கிற்கு அடிப்பாகந்தான் தூய வெள்ளையாகக் காணப்படும். எனினும் கொக்கு பறக்குங் கால் வெண்மையாகக் காணப்படுவதால் கொக்கை வெள்ளை நிற முடையதென்று கருதுகின்றனர். சங்க நூல்களில் கொக்கின் நிறத்தை வெள்ளை நிறமென்று கூறவில்லை. கொக்கு அமர்ந்திருக்கும்போது மண்ணின் நிறமாக காணப் படும். பழுப்பு நிறம் மிகுந்து காணப்படும். வாலும் முன் கழுத்தும் முன் சிறகும் வெண்மையாகக் காணப்படும்.

"மாரிச் சுதையின் ஈர்ம்புறத் தன்ன
கூரற் கொக்கின் குறும்பறைச் சேவல்" —அகம். 346

*"மாரி யாம்பல் அன்ன கொக்கின்*
*பார்வ லஞ்சிய பருவரல் ஈர்ஞெண்டு"* —குறுந். 117.

*"மீன்உண் கொக்கின் தூவி அன்ன*
*வானரைக் கூந்தன் முதியோள் சிறுவன்"* —புறம். 277.

மாரிக்காலத்தில் சுண்ணும்பு பூசிய ஈரமான சுவர் பழுப்பு நிறமாகிக் காணப்படுவதுபோல் கொக்கின் நிறம் இருந்ததாக அகநானூறு கூறுகின்றது. மழைக்காலத்தில் மழையின் ஈரம் பட்டுச் சுண்ணும்புச்சுவர் நிறம் மாறுவது இயற்கையே. அப்படி நிறம் மாறின சுண்ணும்புச்சுவர்போலக் குளக்கொக்கின் உடல் நிறம் இருந்ததாகக் கூறியது அழகிய உவமையாகும். மாரிக் காலத்து ஆம்பற்பூவின் இதழ்கள் வெண்மை நிறத்தை இழந்து பழுப்பாக மழுங்கித் தோன்றும். அது போன்றே கொக்கின் உடலின் நிறம் இருந்ததாகக் கூறியதைக் கவனிக்க வேண்டும். புறநானூற்றில் முதியவளின் நரைத்த கூந்தலைப் போலக் கொக்கு இருந்ததாகக் கூறியிருப்பதைக் காணலாம். இப்பாடல்களில் கொக்கு வெண்மையானது என்று வர்ணிக்காமையைக் கவனிக்க வேண்டும். கொக்கின் நிறத்தை நன்கு கண்டுணர்ந்தே பாடியுள்ளனர்.

*"கொக்கினுக்கு ஒழிந்த தீம்பழங் கொக்கின்*
*கூம்புநிலை அன்ன முகைய ஆம்பல்"* —நற்றிணை. 280.

*"பைங்காற் கொக்கின் புன்புறத் தன்ன*
*குண்டுநீ ராம்பலுங் கூம்பின வினியே"* —குறுந். 122.

*"..............................வள்ளுகிர்*
*மாரிக் கொக்கின் கூரலகு அன்ன*
*குண்டுநீ ராம்பல் தண்துறை யூரன்"* —நற்றிணை. 100.

ஆம்பல் குவிந்திருந்தபோது தோன்றும்நிலை கொக்கின் கூம்புநிலைபோல இருந்ததாகச் சங்கப் புலவர்கள் உவமித்துள்ளனர். கொக்கின் கூம்பு நிலையென்றது இந்தக் கொக்கு தன் கழுத்தைச் சுருக்கிக் குனிந்து குறுகி உட்கார்ந்திருப்பதால் என்றுணர வேண்டும். கூரல் கொக்கு என்று இந்த நிலையை அகநானூறு கூறும். கொக்கின் இந்தக் கூம்பு நிலையை, கூரல் நிலையை (Standing hunched up and motionless) பறவை நூலார் குறிப்பிட்டுள்ளனர். இந்த நிலையில் இதன் உடல் நிறத்தில் வெண்மையே தெரியாது. சாம்பல் கலந்த பழுப்பு நிறந்தான் தெரியும். இதனுல் ஆம்பலின் முகைக்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது. கொக்கின் உடலில் காணப்படும் மேல் நிறத்தைப் 'புன்புறம்' என்று குறுந்தொகை

கூறுகின்றது. கொக்கின் கூரலகும் ஆம்பல் முகைபோல இருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. இனஞ்சேருங் காலத்தில் குடுமிபோன்ற மூன்று அல்லது நான்கு தூவிகள் கொக்கின் தலையில் தோன்றுகின்றன.

''குடுமிக் கொக்கின் பைங்கால் பேடை'' —அகம். 290.

இதையே 'குடுமிக்கொக்கு' என்று அகநானூறு கூறுகின்றது. (A nuchal crest of three or four long narrow white feathers develops) கொக்கின் கால்விரல் நகங்கள் நெல்லின் சோறு போல் இருந்தாக உவமித்துள்ளனர்.

''பொற்றொடி மகளிர் புறங்கடை உகுத்த
கொக்குகிர் நிமிரல் மாந்தி எற்பட'' —நற்றிணை. 258.

''கொக்குகிர் நிமிர லொக்க லார'' —புறம். 398.

''பெருஞ்செய் நெல்லின் கொக்குகிர் நிமிரல்'' —புறம். 395.

கொக்கின் விரல் நகங்களைக்கூடச் சங்கப்புலவர்கள் உற்று நோக்கி உவமை தேடிக் கூறியுள்ளனர். கொக்கின் நகங்கள் நீண்டு, மெல்லியதாய், (long and thin claws) காணப்படு மென்பார் கால்களின் நிறத்தைக்கூடக் குறிப்பிட்டுள்ளனர்.

''பைங்காற் கொக்கின் மென்பறைத் தொழுதி
பிருங்களி பரந்த வீர வெண்மணற்'' —நெடுநல். 15-16.

''பைங்காற் கொக்கின நிரைபறை யுகப்ப'' —அகம். 120.

''குடுமிக் கொக்கின் பைங்கால் பேடை'' —அகம். 290.

இதன் கால்கள் பச்சை நிறமாக இருக்குமென்று (legs and feet dull green) அறிஞர் கூறுவர். கொக்கு இரை தேடு வதைக் குறித்துச் சில புலவர்கள் பாடியுள்ளனர்.

''மாரிச் சுதையின் ஈர்ம்புறத் தன்ன
கூரற் கொக்கின் குறும்பறைச் சேவல்
வெள்ளி வெண்டோ டன்ன கயல்குறித்துக்
....................................................
வருந்திக் கொண்ட வல்வாய்க் கொடுஞ்சிறை
மீதழி கடுநீர் நோக்கிப் பைப்பயப்
பார்வல் இருக்கும் பயங்கெழு ஊர'' —அகம். 346.

''நீரறன் மருங்கு வழிப்படாப் பாகுடிப்
பார்வற் கொக்கின் பரிவேட் பஞ்சாச்

சீருடைத் தேஎத்த முனைகெட விலங்கிய
நேருயர் நெடுவரை யயிரைப் பொருந" —பதிற். 21 : 26-29.

"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து" —திருக்குறள். 490

உழவர்கள் நெல் வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்சச் செய்த அணையின் மேலே தேங்கி வழியும் கடிய நீரினைப் பார்த்து மெல்ல மெல்லச் சென்று நோக்கியிருக்கும் கொக்கு என்று அகநானூறு கூறுகின்றது. நெல் வயல்களில் நீர்மடைகளில் கண்டதையே சங்கப் புலவர் பாடியுள்ளார். இவ்வாறு நீர்மடைகளில் இந்தக் கொக்கு காணப்படுவதால் இதை 'மடையான்' என்றழைக்கின்றனர். பொறுமையாக நெடுநேரம் மீனிற்காக நீரைப் பார்த்துக்கொண்டிருக்கும் கொக்கையே "பார்வல் கொக்கு" என்று பதிற்றுப்பத்து கூறுகின்றது. பாகுடி என்ற சொல் கூர்மையான பார்வையைக் குறிக்கின்றது. பரிவேட்பு என்பது கொக்கு நின்ற நிலையில் வேட்டையாடுவதைக் குறிக்கின்றது. கொக்கு வேட்டையாடும் முறையைக் குறள் பாட்டு மிகத் தெளிவாக, அழகாகக் கூறுகின்றது. அதற்குப் பரிமேலழகர் கூறிய உரை மிகவும் சிறந்து உள்ளது. "மீன் கோடற் கிருக்கும் வழி அது வந்தெய்தும் துணையும் முன்னறிந்து தப்பாமற் பொருட்டு உயிரில்லாது போன்றிருக்கு மாகலானும் எய்தியவழிப் பின்றப்புவதற்கு முன்பே விரைந்து குத்துமாகலானும் இருப்பிற்கும் செயலிற்குங் கொக்கு உவமை யாயிற்று" என்று பரிமேலழகர் விளக்கங் கூறியுள்ளார். உயிரல்லது போன்றிருக்குமென்று கூறியதைக் கவனிக்க வேண்டும். பறவை நூலாரும் இப்பறவை ஆடாது அசையாது நின்றுகொண்டு வேட்டையாடும் என்பர். (It spends most of its time standing in shallow water, or by its edge, its body nearly horizontal and neck retracted, intently watching for the approach of any unwary fish. while thus engaged it is very inconspicuous, its drab mantle concealing the white wings which flash out with startling effect when the bird flies.) சங்க நூல்களிலும் நீர் குறைந்த இடத்தில் கரையில் கூம்பிய உடலோடு கூரிய பார்வையோடு பார்த்துக்கொண்டிருக்கும் என்று கூறியுள்ளனர். கூம்பு நிலையைச் சங்க நூல்களில் குவிந்த ஆம்பலுக்கும், கொக்கிற்கும், கூறியதுபோல வள்ளுவரும் சங்க நூல் மரபில் அரசனானவன் கொக்கு கூம்புமாறுபோலக் கூம்பியிருக்க வேண்டுமென்றார். இந்த முறையாகக் கூம்பியிருக்கும்போது இந்தக் கொக்கு இதன் சூழலுடன் ஒன்றித்து இருப்பதால்

இதைப் பிரித்துணர்வது கடினம். வேட்டையாடச் சென்றோர் இதை நன்கு உணர்வர். இந்தக் கொக்கு ஆடாது அசையாது இருந்து தன் சூழ்நிலையில் அதன் நிறத்தின் காரணமாக மறைவதால் மனிதனைக் குருடாக்கும் கொக்கு என்ற பொருளில் குருட்டுக் கொக்கு என்று பெயர் பெற்றது. குருட்டுக் கொக்கு என்பதற்கு நேரான பொருளான கண்குருடான கொக்கு என்று கொண்டால் அது தவருகும். கூர்மையான கண்ணுடைய கொக்கை எப்படிக் குருடாக்க முடியும்! குருட்டுக் கொக்கு என்ற பொருளிலேயே இதைக் காணுக்கொக்கு என்று ஈழத்தில் அழைக்கின்றனர். இந்தியிலும் இப்பொருளில் இதன் பெயர் (Andha Bagla) வழங்குகின்றது. இதை நொள்ளைமடையான் என்றழைக்கின்றதும் இதே காரணத்தால்தான். கொக்கின் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிப்பதுபோல் என்றொரு பழமொழி உள்ளது. கொக்கை அதன் சூழ்நிலையில் கண்டுபிடிப்பது கடினம். அதனிலும் கடினம் கொக்கை நெருங்கி அதன் தலையில் வெண்ணெய் வைப்பது. ஏனென்றல் கொக்கு கூர்ந்த பார்வையுடையது. வெண்ணெய் வைக்கும் நேரத்தில் அதைப் பிடித்துவிடலாம். இந்தப் பழமொழி கொக்கு குருடு அன்று என்பதைக் காட்டுகின்றது. இந்தக் கொக்கைக் குளத்துக் கொக்கு என்றும் அழைப்பர். மலையாளத்தில் குளமூண்டி என்றழைக்கப்படும். நற்றிணை 230ஆம் பாடலில் 'கயக்கணக் கொக்கு' என்றழைக்கப்பட்டுள்ளது. ஆதலின் குளக்கொக்கு என்றழைக்கப்படுவது சங்க நூல் மரபை ஒட்டியதாகும். ஆரல் மீனின் முட்டையைத் தின்பதாகப் புறநானூறு கூறுகின்றது.

"பைங்காற் கொக்கின் பகுவாய்ப் பிள்ளை
மென்சேற் றடைகரை மேய்ந்துண் டதற்பின்
ஆர லீன்ற வையவி முட்டை
கூர்ந விறவின் பிள்ளையொடு பெறூஉம்" —புறம், 342.

மெல்லிய சேறு நிறைந்த கரையில் மேய்ந்து ஆரல் மீன் இட்ட முட்டைகளையும் இருல் மீனின் குஞ்சையும் தின்னும் என்று கூறியுள்ளார். கடற்கரைக் கழிகளில் மேய்வதால் 'கொக்கார் கொடுங்கழி' என்று கைந்நிலை (55) கூறுகின்றது.

கொக்கு கூடுகட்டி அதன் பிள்ளைகட்கு இரை தருவதும் கூறப்பட்டுள்ளது.

"கொழுஞ்சுளைப் பலவின் பயங்கெழு கவாஅன்
செழுங்கோள் வாங்கிய மாச்சினைக் கொக்கின்
மீன்குடை நாற்றந் தாங்கல்செல் லாது
துய்த்தலை மந்தி தும்மும் நாட" —நற்றிணை. 326.

''குடுமிக் கொக்கின் பைங்கால் பேடை
இருஞ்சேற்று அள்ளல் நாட்புலம் போகிய
கொழுமீன் வல்சிப் புன்தலைச் சிறுஅர்
நுண்நாண் அவ்வலைச் சேவல் பட்டென
அல்குறு பொழுதின் மெல்கிரை மிசையாது
பைதற் பிள்ளை தழீஇ ஒய்யென
அங்கட் பெண்ணை யன்புற நரலுஞ்'' —அகம். 190.

பலாவின் செங்குத்தான கிளையில் கூடுகட்டி மீனைக் கொண்டு வந்து உண்ட நாற்றத்தைத் தாங்க முடியாது மந்தி தும்மியதாக நற்றிணை கூறுகின்றது. பனைமரத்தில் பிள்ளைகளைத் தழுவிக் கொக்கின் பேடையிருந்ததாக அகநானூறு கூறுகின்றது. சிறுவர்கள் கொக்கின் சேவலை நுண்ணிய வலைபோட்டுப் பிடித்ததையும் கூறியுள்ளது. கொக்குகள் 'இருஞ்சேற்று அள்ளலில்' இரை தேடிச் சென்றதாகக் கூறப் பட்டுள்ளது. காய்ந்துபோன நீர்நிலைகளில் ஈரமான சேற்றில் மீன்களைத் தின்னக் கொக்குகள் கூட்டமாக இருப்பதைக் காணலாம். கொக்குகள் கூட்டமாகப் பறக்கும்போதும், இரை தேடித் தின்று திரும்பும்போதும் V என்ற எழுத்துப்போல வரிசையாகச் செல்லுமென்று பறவை நூலார் கூறுவர்.

''நெடுவேள் மார்பி னாரம் போலச்
செவ்வாய் வானந் தீண்டிமீ னருந்தும்
பைங்காற் கொக்கின நிரைபறை யுகப்ப
வெல்லை பைப்பயக் கழிப்பிக் குடவயிற்
கல்சேர்ந் தன்றே பல்கதிர் ஞாயிறு'' —அகம். 120

நெடுவேளின் மார்பில் ஆரம் இருந்ததுபோல மீனைத் தின்ற கொக்குகள் செந்நிறமான அந்திவானில் வரிசையாக இறக்கைகளை அடித்துச் சென்ற மாலை என்று அகநானூறு கூறுவது கவனிக்கத்தக்கது. மார்பில் ஆரம் V என்ற எழுத்துப் போல இருப்பது கொக்கின் வரிசைக்கு ஏற்ற உவமையென்பதைக் காட்டுகின்றது. கொக்கைக் கொன்று உரித்துப் பார்த்தால் எப்படியிருக்கும் என்பதைக் கலித்தொகை கூறுகின்றது. எலும்புகள் தெரியும் கூனியின் உடல் கொக்கைத் தோலுரித்தாற்போன்று இருந்ததாகக் கூறுகின்றது.

''நல்லாய்கேள் உக்கத்துமேலு நடுவுயர்ந்து வாள்வாய
கொக்குரித் தன்ன கொடுமடாய் நின்னையான்'' —கலி. 94

கொக்கைத் தோலுரித்துப் பார்க்குங்கால் அதன் முதுகு உயர்ந்தும் கழுத்து சுருங்கியும் கூனிக் குறுகிக் காணப்படும்.

கொக்கு உட்கார்ந்து இருக்கும்போது கழுத்தை உள்ளடக்கிக் கூனிக் குறுகி இருப்பதால் உரித்த கொக்குபபோலக் கிழவியான கூனியிருப்பதாகக் கலித்தொகை கூறியது மிகவும் அழகான நுட்பமான உவமையாகும். பறவை நூலாரும் கொக்கு கூனிக் குறுகி (hunched) அமர்ந்திருப்பதை விளக்கிக் கூறியுள்ளனர். சங்க நூல்களில் வரும் கருப்பொருள் உவமைகளின் பொருத் தத்தையும் நுட்பத்தையும் உணர எந்த அளவு இயற்கைச் செய்திகளைப்பற்றிய அறிவு இன்றியமையாதது என்பது இதிலிருந்து விளங்கும்.

கொக்கு என்ற பெயர் இதன் கொக்கி போன்ற வளைந்த கழுத்தின் காரணமாக வந்ததென்று தெரிகின்றது. கொக்கின் கழுத்து இதன் இனமான நாரை முதலிய பறவை களின் கழுத்தும் நடுவில் வளைந்து S என்ற எழுத்துப்போல இருக்கும். ஆனால் இந்த வளைந்த கழுத்தைக் கொக்கு தன் உடலில் சுருக்கிக்கொள்வதால் வெளியே தெரிவதில்லை. இரை தேடும்போது இரையைக் கண்டால் இந்தக் கொக்கி போன்ற கழுத்து வெளியே வருகின்றது. திடீரென்று கொக்கி போன்ற கழுத்தை நீட்டி இரையைப் பிடிக்கின்றது. கொக்கு தெலுங்கு மொழியில் ''குட்டிகொங்கா'' என்றழைக்கப்படும். குருட்டுக் கொக்கு என்பதே இதன் பொருள். கொக்குகளைக் 'கொங்கா' என்றழைப்பதைக் காணலாம். கோண்டி மொழி யிலும் 'கொங்க' என்ற சொல் கொக்கைக் குறிக்கின்றது. சிங்கள மொழியிலும், மலையாள மொழியிலும் கொக்கு என்ற சொல் பலவகை நீர்ப்பறவைகளைக் குறித்து வழங்குகின்றது. மராத்தியில்கூட 'ராத்கொக்கு' என்று வக்காவை அழைக் கின்றனர். கொக்கு என்ற பெயர் திராவிட மொழிகளில் வழங்கிய பழங்காலத்திய சொல் என்று கருதலாம். கொக்கின் பெயர் ஆங்கிலத்தில் Pond Heron அல்லது Paddy Bird என்பனவாகும். பறவை நூலில் Ardeola grayii என் றழைப்பர்.

**மேற்கோள் கையாண்ட நூல்கள் :**

1. Hand book of the Birds of India and Pakistan—Salim Ali and S. Dillon Ripley—Volume 1—O. U. P.

2. A guide to the Birds of Ceylon—G. H. Henry—O. U. P.

# புறத்துறைகட்குக் கிடைத்த புதுச் சான்றுகள்

(புலவர் இரா. இளங்குமரன், திருநகர், மதுரை)

புறத்துறை இலக்கணம் அல்லது போர்த்துறை இலக்கணம் வகுத்த ஆசிரியர் தொல்காப்பியனுர், புறத்திணையியலில் உழிஞைத்திணையின் துறைகளுள் ஒன்ருகக் 'கொள்ளார் தேளம் குறித்த கொற்றம்' என்பதைக் குறிப்பிடுகின்ருர். (தொல். புறத். 12)

'கொள்ளார் தேளம் குறித்த கொற்றம்' என்பது "பகைவர் நாட்டினை (ஒரு வேந்தன்) தான் (வெற்றி) கொள்வதற்கு முன்னேயும் (அந் நாட்டினை) வெற்றி கொண்டான்போல வேண்டியோர்க்குக் கொடுத்தலைக் குறித்த வெற்றி" என்று கூறி "இராமன் இலங்கை கொள்வதன் முன் வீடணற்குக் கொடுத்த துறை" என்று உரை விளக்கம் செய்கின்ருர் ஆசிரியர் நச்சிஞர்க்கினியர். அவர் இந்நாள் இருப்பின் என்ன சான்று கூறுவார் ?

வங்கதேசம் எனத் தனி ஒரு தேசம் தோன்று முன்னரே, அதனை உரிமை பெற்ற ஒரு தேசமாக நாடாளுமன்றத்தில் ஏற்று, நானிலமெங்கும் முழக்கி, அதன்பின் வீறுமிக்க போரால் வெற்றிகொண்டு, தன் உரையை உறுதியாக்கிக் காட்டி உலகமும் கொள்ளவைத்த 'இந்தியத் தாயி'ன் இணையற்ற வீரம் இருக்கிறதே, இஃதொன்றையே 'கொள்ளார் தேளம் குறித்த கொற்றத்'திற்கு முற்றும் பொருந்திய சான்ருகக் கூறியிருப்பார் நச்சிஞர்க்கினியர்.

> "பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
> ஊராண்மை மற்றதன் எஃகு" (திருக். 773)

என்பது வள்ளுவர் கூறும் படைச்செருக்கு.

இதற்கு உரை விளக்கம் கூற வந்த ஆசிரியர் பரிமேலழகர், "பகைவர்மேல் கண்ணேடாது (இரக்கம் காட்டாது) செய்யும் மறத்தை நூலோர் மிக்க ஆண்தன்மை என்று சொல்லுவர் ; அவர்க்கு (பகைவர்க்கு) ஒரு தாழ்வு வந்ததாயின் கண்ணேடி (இரக்கங்காட்டி) அது தீர்த்துக் கோடற்பொருட்டு ஊராண்மை (உதவி) செய்தலை நூலோர் அதற்குக் கூர்மை என்று சொல்லுவர்" என்று கூறி,

"ஊராண்மை-உபகாரியாந்தன்மை; அஃதாவது இலங்கையர் வேந்தன் போரிடைத் தன் தானை முழுதும் படத் தமியனாய் அகப்பட்டானது நிலைமை நோக்கி, அயோத்தியர் இறை மேற் செல்லாது 'இன்றுபோய் நாளை நின் தானையோடு வா' என்று விட்டாற் போல்வது" என்று எடுத்துக்காட்டுந் தருகிறார். இந்நாள் அவர் இருந்தால் என்ன எடுத்துக் காட்டுத் தருவார்?

(1) '1000 ஆண்டுகள் போர் நடக்கும்' என்று பகைவன் கூச்சலிட்டதைக் கேட்டும்,

(2) ஒரு பாகித்தான் வீரன் மூன்று இந்திய வீரர்களுக்கு இணை என்று இறுமாப்போடு பேசியதைக் கேட்டும்,

(3) 'ஒரு பெண்ணால் என்ன செய்துவிட முடியும்?' என்று பேதைமைக்குப் பேருருவாய்ப் பேசியதைக் கேட்டும்,

(4) தன் குடிவழி, கொடிவழி மக்கள் பத்து நூறாயிரம் பேரைப் படுகொலை செய்ததை அறிந்தும்,

(5) ஒருகோடிப் பேரை நாடற்றவர் ஆக்கி நம் மண்ணே புகல் என்று ஓடிவரச் செய்ததை அறிந்தும்,

(6) தன்னால் தகர்க்கப்பட்ட நாடு மீண்டும் தலைதூக்கி விடக்கூடாது என்று அறிவாளர்களை விலங்கு போல் வேட்டையாடிக் கொன்றதை அறிந்தும்,

(7) இரட்டை வல்லரசுகள் வரிந்து கட்டிக்கொண்டு குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக் குழிக்குள் வீழ்வதுபோல் வீழ்ந்து, குட்டை குழப்பிக்கொண்டு தொடர்ந்து பணிசெய்வதைத் தெளிந்தும்,

(8) கோமாளிக்கூத்து முதல் எக்கூத்துக்கும் ஓர் அரங்கம், அனைத்துலக மன்றமே என்பதைத் தெரிந்தும்,

(9) வெற்றிமேல் வெற்றி என்று எல்லா முனைகளில் இருந்தும் செவியினிக்கச் செய்தி வந்துகொண்டிருந்ததை அறிந்தும்,

(10) பகைவர் மண்தான் 'களப்போர் நிலையம்' என்பதை உணர்ந்தும்,

(11) நிலாவின் தலையில் காலடிவைக்கும் அளவுக்கு அறிவியல் அறிஞர்களைத் தோற்றுவித்த மண்ணிலே தோன்றி, உரிமைக் கொலைக்கு ஓடி வந்த ஒழியாப் பாவமூட்டை தாங்காமல் கல்லறைக்கே இருப்பாய் ஒழிந்த வானூர்தி களையும், 'டாங்கி'களையும் கைகொட்டி நகைத்துக் கண்டும்,

(12) உலகத்து நேரிய நெஞ்சங்களெல்லாம் 'செய்தக்க செயலே' என்று இசைப்பதை இனிக்கக் கேட்டும்,

(13) "அறுபது கோடி முகமுடையாள்—ஆனல்
ஆருயிர் ஆற்றலால் ஒன்றுடையாள்"

என்று வியக்க நாடே வரிந்து கட்டிக்கொண்டு உதவியாய் நிற்பதைக் கண்டு களிப்புற்றும்,

(14) நூருயிரம் வீரர்களைச் சுற்றி வளைத்துச் சூறை யாடுதற்கு வலுத்த வாய்ப்புக் கிட்டியிருப்பதைக் கண்ணாரக் கண்டும்,

—அச்சமறியா அந்த வீரத்தாய், உரிமையே உயிரான அந்த வீரத்தாய், இந்தியப் பெருமண்ணின் பெருந்தாய்,

(1) "வீணாக வீழ்ந்து மடியாதீர்! மார்தட்டி நின்று மண்ணாகாதீர்! ஆருயிர் தப்ப அடைக்கலமாவீர்! செனிவா உடன்படிக்கைப்படி உறுதியாக நடத்தப் படுவீர்" என்று நூருயிரம் பேர்க்கும் அவரைச் சார்ந்த பன்னூருயிரம் பேர்க்கும் வாழ்வுதந்தாரே அதை,

(2) முற்றிய நகரில் இருந்து அயல்நாட்டார் வெளி யேற வாய்ப்புவேண்டும் என்றவுடன் தடையின்றி வாய்ப்புத் தந்தாரே அதை,

(3) அனைத்து நாட்டுப் பார்வையாளர் வெளியேறப் போர் ஓய்வுவேண்டும் என்று கேட்க ஒரு மடங் குக்கு இருமடங்கு போர் ஓய்வு தந்தாரே அதை,

(4) கிழக்கு முனையின் அடைக்கலச் செய்தி நாட்டோர் செவிகளில் அடைக்கலமாகு முன் தன் முடிவே நன்முடிவாய்-வெளியார் தூண்டுதல் வேண்டுதல் இல்லாமல்—நமக்கு மண்ணாசை இருந்ததும் இல்லை, இருக்கப்போவதும் இல்லை என்பதை உலகம் உணர—போர் நிறுத்த அறிவிப்பை நாடாளுமன்றத்தில் நானிலமறிய முழங்கினாரே

அதை—எந்த ஆண்மை என்பது? பேராண் மையை விஞ்சிய ஊராண்மைகள் ஒன்று இரண்டா?

இந்நாளில் பரிமேலழகர் இருந்தால் ஊராண்மைக்கு இவற்றை எடுத்துக்காட்டாமல் விடுவாரா? புறத்துறைக்கு இன்னும் எத்துணையோ புதிய எடுத்துக்காட்டுக்கள். இவை நிற்க.

பாகித்தான் புதுத் தலைவருக்கு (?) ஒரு செய்தி!

பதவியைக் காத்துக்கொள்வதற்கு இந்தியாவைப் பழித்துக்கொண்டே இருக்கலாம்; பகைச்சேற்றை அள்ளி வீசிக்கொண்டே இருக்கலாம்; ஒன்றுபட்ட பாகித்தான் பற்றி 'உறுமி' கொட்டிக்கொண்டே இருக்கலாம்! ஆனால் இந்திய மண்ணைத் தாக்க எழுந்தால்.......?

பகைவன் நிலைமை தெரியாமல் போரிடத் தாவிக்குதிக்கும் ஒருவனைப் பார்த்து ஒரு தமிழ்வீரன் கூறுகிறான்: "கேட யத்தைத் தா! கேடயத்தைத் தா! என்று கேட்கிறாய். கேடயத்தால் உன்னை மறைத்துக்கொண்டு போரிடலாம் என்ற நினைவா? பெரிய பாறையையே நீ கேடயமாகக் கொண்டாலும் தப்பிவிடமாட்டாய்!"

இதே செய்திதான் புதுத் தலைவருக்கு, அவர் நம்பி யிருக்கும் படை கேடயம்! வல்லரசுகளின் 'பசப்பு' பாறை!

"மக்களாட்சி வாழ்வதற்காக லின்கன், கென்னடி ஆகியோர் உயிர் இழந்தனர். ஆனால் நிக்சனே மக்களாட்சி உயிரிழப்பதற்காக வாழ்ந்துகொண்டிருக்கிறார்" என்று உண்மையைப் படம் பிடித்துக் காட்டினாற்போல் ஒருவர் கடிதம் எழுதுமாறு, திருப்பணி செய்துகொண்டிருக்கிறாரே அந்த "மனநோய், யானை வெருட்டிச் சொடுக்குப்" பெருந்தலைவ ருக்கு ஒரு செய்தி:

வெள்ளைமாளிகையில் இருக்கும் நீவிர் சுமந்துகொண் டிருக்கும் அழுக்கு மூட்டைகட்கு அளவில்லை! அந்தோ! நும்பால் இரக்கமே உண்டாகின்றது. இதுகாறும் நீவிர் செய்துள்ள 'திருப்பணி'கட்குத் தகுதியான கழுவாய் தேடிக் கொள்ள வேண்டுமென்றால், ஒன்றே ஒன்றுதான்! அஃது 'இந்தியத் தாயி'ன் எழிற் பெருஞ்சிலையை, நும்நாட்டுச் சுதந்திரச் சிலையின் பக்கத்தே அதற்குக் குறையாத உயரத்தில் எழுப்பி, நீவிர் மண்டியிட்டு நின்று 'அகந்தூய்மை' செய்து கொள்வதே.

# இனிய காட்சிகள் இரண்டு

[நெல்லை ந. சொக்கலிங்கம் எம். ஏ.

*தமிழ் விரிவுரையாளர், குமரகுருபர சுவாமிகள் கலைக்கல்லூரி, சீர்வைகுந்தம்*]

நகைச்சுவை பொருந்தி வருமாறு பாடல் இயற்றுவது மிகவும் கடினம். அதிலும் உள்ளத்தில் நின்று நிலைக்கின்ற அளவு மாண்புடைய நகைச்சுவையினைப் படைப்பது என்பதற்கு அரிய புலமையாற்றல் வேண்டும். அவ் வண்ணம் நீடித்து நிற்கும் நகை வண்ணங்களை நல்லிசைப் புலவர் பலர் படைத்துத் தந்துள்ளனர். செயற்கையாயும் நகைச்சுவை மெய்ப்பாடு தோன்றும் வகையிற் பாடலாம். இயற்கை நிகழ்ச்சிகளையும் பயன்படுத்தி நகைச்சுவையினை அமைத்துக் காட்டலாம். இவற்றுள் இயல்பாக நிகழும் நிகழ்ச்சியினைச் சிறப்புறப் பேசுவர். அச்சிறப்புடைய நகைத் திறத்தைச் சுவைத்து மகிழ்வதில் தனித்த இன்பம் இருக்கத்தான் செய்கிறது.

**நக்கீரர் காட்டும் நகை :**

மலைச்சாரலில் நிகழும் ஓர் இனிய நிகழ்ச்சி. மலைச் சாரலில் ஒரு பக்கம் பளிக்குப்பாறை அமைந்துளது. அதே மலைச்சரிவில் செழித்து வளர்ந்துள்ள மா, பலா முதலிய மரங்கள். பயன் கொழிக்கும் அம்மரங்கள், பழுத்துக் கனிகளைக் கொண்டு விளங்கும் பருவ காலமும் வந்தது. அங்கேயே வாழ்கின்ற குரங்குகள் எவ்வியப்பையும் கண்டில. ஆனால் வேறொரு பகுதியில் வாழ்கின்ற குரங்கொன்று அவ்விடத்திற்கு வந்தது. அது வந்த நேரம் கதிரவன் காய்கின்ற நேரம் ஆகும். நன்கு பழுத்த கனிகளைக் கொண்டுள்ள மா முதலிய மரங்களின் நிழல் வெயில் பட்டதனால் பளிக்குப் பாறையில் படிந்து தோன்றியது. பளிக்குப் பாறையில் பதிந்து தோன்றும் இவ்வரிய காட்சியினைக் கண்ட அக்கல்லாக் குரங்கு உண்மைப் பழமே என்று கருதிக் கொண்டது. அதனோடு நில்லாது தான் வாழ்ந்து வருகின்ற இடத்தில் வாழ்கின்ற ஏனைய குரங்குகளுக்கும் சொல்லிக் கையோடு அழைத்து வந்தும் காட்டிற்று. பழத்தின் நிழல் வீழ்ந்த பளிக்குப் பாறையினை எல்லாக் குரங்குகளும் இணைந்து நின்று தம் கைவிரலும் நகங்களும் புண்படுமாறு மிக விரைந்து தோண்டின. அறிவில்லாக் குரங்கு பாறையில்

பழம் பழுத்துள்ளது என்று எண்ணித் தான் ஏமாற்றம் உற்ற தோடும் தன் இனத்தையும் ஏமாற வைத்தது. இச் செயலை நாம் நேரில் கண்ணுறும்போது எப்படி மகிழ்ச்சியடைவோமோ அதே அளவு நகைச்சுவை தோன்றுமாறு சொல்லோவிய மாக்கிக் காட்டுவர் நக்கீரதேவ நாயனர். இதோ :

"கல்லாக் குரங்கு பளிங்கிற் கனிகாட்ட
எல்லாக் குரங்கும் உடனீண்டி—வல்லே
இருந்துகிராற் கற்கிளைக்கும் ஈங்கோயே மேனிப்
பொருந்தவராப் பூண்டான் பொருப்பு"
(திருஈங்கோய்மலை எழுபது: 29).

ஆம்! இத்தகைய வளமும் வனப்பும் மிக்குடையது அண்ணமலையான்—சிவபெருமான் வீற்றிருக்கும் திருவீங்கோய் மலை! கொழுந்தெழுந்த செஞ்சடையான் வீற்றிருக்கும் அக்குன்றின் சிறப்பினை ஒரு பாடலில் அடக்கவில்லை; எழுபது வெண் பாக்களை அமைத்துள்ளார். பதிஞெரா ந்திருமுறையில் அமைந் துள்ள இப்பாக்களைப் பாடியவர் நக்கீரதேவநாயனர் ஆவார். சுவைக்கு ஒன்று கண்டோம் இங்கே !

பரணிச்சுவை :

களம் வென்ற செம்பியனின் சிறப்பினை விரித்துப் பேசும் செயங்கொண்டார் காட்டும் ஒரு நகைச்சுவைக் காட்சி. கருங் குழல் காரிகையர் தம் கொழுநரோடு கலவி மயக்கத்தில் தாம் உடுத்தியிருந்த கலை நெகிழ்ந்து வேறு புறம் ஒதுங்கிற்று. அந்த நேரத்தில் ஆடை என்று எண்ணிக் கலைமதியின் ஒளி யைத் துகில் என்று விரைவாக எடுத்து உடுத்திக் கொள்ள முந்துகின்றனர்; முனைகின்றனராம் நில ஒளியை ஆடை யென உடுத்த முனையும் பொய்ம்மை நிலையினைப் படிக்கும் போது நகைச்சுவை தோன்ருதிருக்குமா ? இது கடை திறப்பில் வரும் நகைச்சுவைத் திறப்பாகும்.

"கலவிக் களியின் மயக்கத்தாற்
கலைபோய் அகலக் கலைமதியின்
நிலவைத் துகிலென் றெடுத்துடுப்பீர் !
நீள்பொற் கபாடந் திறமினே!'
(கலிங்கத்துப்பரணி: கடைதிறப்பு: 29)

இவ்வாறு இனிய காட்சிகளைக் காட்டி நம்மை மகிழ்விக்கும் இலக்கியக் காட்சிகள் ஏராளம்! அவற்றை யெல்லாம் பழுதறத் தெரிந்து பயன்பெறுவோம் !

———

# கந்தர் அநுபூதி

[என். கே. வேலன், பி. ஏ.]

(சிலம்பு-சசு, பரல்-உ பக்கம் கூசு இன் தொடர்ச்சி)

வள்ளி மணவாளரே, உம்முடைய பாத கமலங்கள் எனது நெஞ்சில் மலரும்படி அருள்புரிய வேண்டுமென அருணகிரியார் கேட்கின்றார்.

குறையாத அன்புடையவனே, மனமாகிய கல்லின் மேல் உன்னுடைய திருவடித்தாமரை பதியுமோ என வினவுகின்றார்.

> "திணியான மனோசிலை மீதுனதாள்
> அணியார் அரவிந்தம் அரும்புமதோ
> பணியாஎன வள்ளி பதம்பணியும்
> தணியா அதிமோக தயாபரனே"

என்பது பாடல். மிகக் கடினமான கருங்கல் போன்ற மனத்தில் முருகனது திருவடி பதிந்து மலரவேண்டுமானால் மனம் சேறு போல் குழைய வேண்டும். முருகன் மலைகளின் மேல் திருக்கோவில் கொண்டு எழுந்தருளியிருப்பவன். மலை என்பது கற்களாலும், பாறைகளாலும் ஆக்கப்பட்டிருப்பதால் முருகனது திருவடித் தாமரை மனக்கல்லிலும் வந்து தோன்றுமெனக் கொள்க.

உள்ளன்புடன் இருப்பவர்க்கு இறைவன் ஏவல் புரியும் தொண்டனாக வருகின்றான் என்பதனை வலியுறுத்தவே வள்ளி பதம் பணியும் என்றார்.

> "கூப்பித் தொழுவார் பதம் குற்றேவலைக்
> குறிக்கொண்டிருக்கும் குழகா போற்றி
>
> —அப்பர் தேவாரம்.

பரிபக்குவ ஆன்மாவை இறைவன் குருநாதனாக வந்து ஆட்கொள்கின்றான்.

வள்ளியம்மை முருகனையே நாதனாக அடைய வேண்டுமென்று தவம் செய்து முருகக் கடவுளையே மணந்து பேறு பெற்றாள்.

இறைவனை நினைந்து உருகும் அடியாருடைய உள்ளத்தில் இறைவன் புகுந்து உறைகின்றான்.

"நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார் சடைப்புண்ணியன்" —தேவாரம்.

இறைவன் வள்ளியைப் பணிவது அளவற்ற கருணையினால் நிகழ்கின்றது என்பதனைக் குறிக்கும் பொருட்டு 'தயாபரனே' = கருணைக்கடவுளே என்றார். இப்பாடலில் ஆண்டவனது பெருங் கருணையைக் குறிப்பிடுகின்றார்.

"பேற்றைத் தவஞ் சற்றுமில்லாத என்னைப்
பிரபஞ்சமென்னும் சேற்றைக் கழியவிட்டவா"
—கந்தரலங்காரம்.

தமது மனத்தில் முருகனது பாதபங்கயம் அரும்பிவிட்டதென மகிழ்கின்றார். எல்லையற்ற கருணையினால் கல்லும் கனிந்து தாமரை உதிக்கின்றது.

வள்ளியம்மையை இச்சா சக்தி என்பர். சக்தியால் தொழிற்படும் இறைவன் சக்தியின் ஆணையை எதிர்பார்த்துப் பணிந்து நிற்கின்றான்.

அடுத்த பாடலில் அருணகிரியார் மனத்தோடு பேசுகின்றார்.

'என் மனமே, இறைவனை நினைந்து பிறவித்துயரைப் பொடியாக்கி அநுபூதி பெறுவாயாக எனக் கூறுகின்றார்.

ஏ மனமே, உய்வுபெறும் வழியைச் சொல்கிறேன் கேட்பாயாக. இரப்பவர்க்கு மறைத்து வையாமல் கொடுப்பாயாக. வேற்படையையுடைய முருகப்பெருமானுடைய திருவடிகளை எண்ணித் துதிப்பாயாக! தொடர்ந்து வரும் பிறவித் துன்பத்தைச் சுட்டெரிப்பாய். வினைகள் யாவற்றிலுமிருந்து விடுதலை பெறுவாய் எனக் கூறுகின்றார். இதனைக்,

"கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவேதனை தூள்படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே"

எனப் பாடுகின்றார்.

கரவாது இட்டவர்க்கு இறைவன் எளியவனாகின்றான்.

"கரவாடும் வன்நெஞ்சர்க் கரியானைக்
கரவார்பால் விரவாடும் பெருமானை" —தேவாரம்.

"மிக்க அறமே விழுத்துணையாவது" —மணிமேகலை.

அடியார்க்கு அளிப்பதே இறைவனுக்கு அளிப்பதாகும்.

"நடமாடும் கோயில் நம்பர்க் கொன்றீயின்
படமாடும் கோவில் பகவற்க தாமே" —திருமந்திரம்.

வேல் ஞானசக்திக்கு அறிகுறியாக நிற்கின்றது.

"வடிவேல் இறைதாள் நினைவாய்"

எப்பொழுதும் அத்தாளினையே சிந்தித்தல் வேண்டும் எனக் கூறுகின்றார்.

"இமைப் பொழுதும் என் நெஞ்சில்
நீங்காதான் தாள் வாழ்க" —மணிவாசகர்.

கருவிலிருக்கும்போதும், பிறக்கும்போதும், பிறந்த பின்னும் பற்பல துன்பங்களை அளிப்பதால் பிறப்பை 'நெடுவேதனை' என்றார். அறம் செய்வதாலும் வழிபாடு செய்வ தாலும் பிறவித் துன்பம் விலகிப் போகின்றது.

அறம் செய்கையில் யான், எனது என்னும் செருக் கற்றிருத்தல் வேண்டும். ஆண்டவன் அளித்த செல்வத்தை ஆண்டவனிடமே சேர்த்து விடவேண்டும்.

"வையிற் கதிர் வடிவேலோனை வாழ்த்தி வறிஞர்க்கு என்றும்
நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்கள்"
—கந்தரலங்காரம்.

"தடுங்கோள் மனத்தை, விடுங்கோள் வெகுளியைத்
இடுங்கோள், இருந்தபடி இருங்கோள்" [தானமென்றும்
—கந்தரலங்காரம்.

வினைகளே இன்ப துன்பங்கட்குக் காரணமாதலின் வினைகள் யாவையும் விடுவாய், விடுவாய் என அடுக்குத்தொடரில் பேசுகின்றார்.

மணிவாசகரும் பின்வருமாறு நெஞ்சுடன் பேசுகின்றார்:—

"வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமற் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடு உனக்குச் சொல்லுகின்றேன் பலகாலும்
வீழ்கின்றாய் நீ அவலக்கடலாய வெள்ளத்தே"

முருகப் பெருமான் குருநாதராக வந்து தமக்கு மெய்ப் பொருளை உணர்த்தியது ஒரு விந்தையாக இருக்கின்றது என அருணகிரியார் கூறுகின்றார்.

சிவகுமாரனே, பார்வதி தேவியின் புதல்வனே, அசுரர்களை அழித்த முருகவேளே, எனது ஊர், உறவினர், வீடு என்று சொல்லப்படும் மயக்க அறிவு ஒழியும்படி மெய்ப்பொருள் இன்னதென்று உணர்வித்தாய். இஃது ஓர் விந்தையாக இருக்கின்றது என்கின்றார். இதனை,

''அமரும் பதிகேள் அகமாம் எனுமிப்
பிமரம் கெடமெய்ப் பொருள் பேசியவா
குமரன் கிரிராச குமாரி மகன்
சமரம் பொரு தானவ நாசகனே''

எனப் பாடுகின்றார்.

பிமரம் = ஒன்றை மற்றொன்றாக நினைந்து அலைதல்.

புறப்பற்று அகப்பற்று என்ற இருவகைப் பற்றுகளும் அற்றால் பிறவியறும்.

''பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும்'' —குறள்

'அமரும்பதி' என்று தொடங்கும் பாடலில் முருகப்பெருமான் தமக்குச் செய்த உபதேசச் சிறப்பினைக் கூறுகின்றார்.

மாணிக்கவாசகருக்குச் சிவபெருமான் காட்சியளித்தது போல் அருணகிரியாருக்கு முருகப்பெருமான் நேரில் வந்து அருள்மொழி கூறியுள்ளார்.

அருவமாயிருக்கும் ஒன்று தமக்கு முன்னால் உருவம் தாங்கி வந்தது அருணகிரியாருக்கு வியப்பாக இருக்கின்றது. இறைவன் குருவடிவாக வந்து பேசியதால் உலக மாயை விலகியது.

''வைத்தநிதி பெண்டிர் மக்கள் குலம் கல்வியென்னும்
பித்தவுலகில் பிறப்போடிறப் பென்னும்
சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பி
—மாணிக்கவாசகர்.

முருகப்பெருமானது அருள்மொழியினால் அருணகிரியாரின் மயக்கம் தெளிகின்றது, மும்மலங்கள் ஒழிவது அவருக்குச் சொல்லொணாத விந்தையாக இருக்கின்றது.

(தொடரும்)

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை நடத்திய

# முதல் பொதுநிலைப் பத்துநாள் கருத்தரங்கு

[டாக்டர் ந. சஞ்சீவி]

'பல்கலைப் பழந்தமிழ்' என்னும் பொருள் குறித்துச் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை, பத்துநாள் கருத்தரங்கினை முதன் முதலாக 19—1-1972 முதல் 28-1-1972 வரை நடத்தியது. தமிழ் ஆராய்ச்சியில் ஊறித் திளைத்த அறிஞர் பெருமக்கள் பதின்மர் தங்களுடைய அரும் பெருங் கருத்துக்களைச் செறிவுமிக்கக் கட்டுரைகளாக அவ் விழாவில் வழங்கினர்.

முதல் நாள் மாலை மதிப்பிற்குரிய சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தாமரைத்திரு நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் கருத்தரங்கைத் தொடங்கி வைத்துச் சிறப்புரை ஆற்றினார்கள்.

பல்கலைக் கழகத்தின் தலையாய மூன்று பணிகள் தொன்று தொட்டு மானிடன் பெற்ற அறிவைப் பாதுகாத்தலும், அவ் வறிவினால் புத்தம் புதிய உண்மைகளைக் காணலும், அவ்வறிவினை ஊக்குவித்து உலகறியச் செய்தலுமேயாம். மக்களாட்சியின் வளர்ச்சிக்குத் தக்கவாறு பணியாற்றுவதே பல்கலைக் கழகத்தின் பணி. கல்வியில் ஆர்வம் உடைய மக்களை உருவாக்குவதாக இன்றைய கல்வி அமைப்புமுறை அமைதல் சாலச் சிறந்தது. இத்தகைய நல்லுணர்வுகளை உருவாக்கித் தரும் நல்லரங்கமே கருத்தரங்கம். பல்கலைக் கழகத்தையும் பல்வகை மக்களையும் இணைக்கும் கருத்துப் பாலமே இக்கருத்தரங்கம். கருத்தரங்கு அறிவினை வாங்கிக் கொள்வதற்கேயன்றி வெளியேற்றுதற் கன்று.

> *"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்*
> *மெய்ப்பொருள் காண்ப தறிவு"*

என்று வான்புகழ் வள்ளுவன் எண்ணிய நல்லறிவினை இக் கருத்தரங்கு தந்து உதவும். கருத்தரங்கினால் நல்ல பயன்கள் விளைவதாகுக. புதிய துறைகளில் முயன்று நல்வெற்றி பெறுவதாகுக!

கருத்தரங்குகள் கருத்துப்போர் புரியும் களமன்று; கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளும் இடமாகும். எனவே இக் கருத்தரங்குகளில்,

"இனிய உளவாக இன்னாத கூறுதல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"

என்னும் திருக்குறளை வழிகாட்டும் ஒளிவிளக்காக் கொள்வது பண்பும் பயனும் ஆகும்.

விழாவிற்கு மெய்ப்பொருள் துறைப் பேராசிரியர், டாக்டர் வா. ஏ. தேவசேனாபதி அவர்கள் தலைமை தாங்கினார். ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் 'பழந்தமிழும் பல்வகைச் சமயமும்' என்னும் பொருள் குறித்து நல்லதொரு கட்டுரையை வழங்கினார்.

பேராசிரியர் சி. டி. இராஜேசுவரன் தலைமையில் இரண்டாம் நாள் (20-1-72) கருத்தரங்கு நடைபெற்றது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் பேராசிரியர் டாக்டர் வே. சண்முகசுந்தரம் அவர்கள் 'திருவள்ளுவரின் பொருளியல் தெளிவு' என்னும் தலைப்பில் அரியதொரு சொற்பொழிவு ஆற்றினார்கள். மூன்றாம் நாள் (21-1-72) அன்று டாக்டர் சந்திரன் தேவநேசன் அவர்களுடைய தலைமையில், டாக்டர் கே. கே. பிள்ளை அவர்கள் 'பழந்தமிழும் சமூக வரலாறும்' என்பதுபற்றி ஆய்வுரை நிகழ்த்தினார்கள். தமிழகச் சட்டப் பேரவையின் செயலாளர் திரு. கா. து. நடராசன் அவர்கள் தலைமையில் 22-1-72 அன்று, டாக்டர் சி. ஏ. பெருமாள் 'திருவள்ளுவரின் அரசியல் தெளிவு' என்னும் பொருள்பற்றிச் சிறப்புரை வழங்கினார். ஐந்தாம் நாள் (23-1-72) கருத்தரங்கிற்கு நீதிபதி திரு பி. ஆர். கோகுல கிருட்டிணன் தலைமை தாங்கினார். தமிழகச் சட்ட ஆணைக் கழகத்தின் செயலர் திரு மா. சண்முக சுப்பிரமணியம், 'பழந்தமிழ்ச் சட்டமும் நீதியும்' என்னும் பொருள் குறித்து விரிவுரையாற்றினார். அருள் வள்ளல் திரு நா. மகாலிங்கம் அவர்கள் தலைமையில், பொறியியல் பேராசிரியர் டாக்டர் வி. சி. குழந்தைசாமி ஆறாம் நாள் (24-1-72) கருத்தரங்கில், 'பழந்தமிழும் பொறியியலும்' என்னும் பொருள்பற்றி அரியதொரு கட்டுரையை வழங்கினார்.

ஏழாம் நாள் (25-1-72) கருத்தரங்கிற்குச் சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் ம. நடராசன் தலைமையேற்றார். சித்த மருத்துவத்துறை இயக்குநரான டாக்டர் சி. எஸ். உத்தமராயர் 'பழந்தமிழும் மருத்துவமும்' என்ற தலைப்பில் சிறந்ததொரு கருத்துரை வழங்கினார்கள். பெரும் புலவர் மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள் தலைமையில், எட்டாம் நாள் (26-1-72) கருத்தரங்கில் திருக்குறள் ஆராய்ச்சி

யாளர் திரு. க. த. திருநாவுக்கரசு 'தொல்காப்பியரின் மொழி நூற் புலமை' என்னும் பொருள் குறித்து ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றைப் படித்தார். ஒன்பதாம் நாள் கருத்தரங்கில் (27-1-72) பேராசிரியர் பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார் தலைமையில், பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் 'பழந்தமிழ்ப் பாநலம்' என்னுந் தலைப்பில் அரியதோர் ஆய்வுரை வழங்கினர்.

கருத்தரங்கின் நிறைவுநாள் (28-1-72) அன்று, நீதிபதி திரு. எஸ். மகாராசன் கருத்தரங்கிற்குத் தலைமையேற்றார். சிலம்புச் செல்வர், தாமரைத்திரு ம. பொ. சிவஞானம் அவர்கள் சென்னைப் பல்கலைக்கழக நூலகர் தயாரித்த 'சிறந்த தமிழியல் நூற்றொகை'யை வெளியிட்டார். உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் நிருவாகத் தலைவரான டாக்டர் கா. மீனாட்சி சுந்தரனார் 'அயல் நாடுகளில் தமிழ் ஆராய்ச்சி' என்னும் பொருள் பற்றிச் சிறந்ததொரு சொற்பொழிவு ஆற்றினார். தமிழத்துறைத் தலைவர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்களுடைய நன்றியுரையோடு, கருத்தரங்கு இனிது நிறைவுற்றது.


விழாவில் அரிய ஆய்வுச் சொற்பொழிவுகளாற்றிய அறிஞர் பெருமக்களைப் பாராட்டி கீழ்க்காணும் அறிஞர்கள் உரை யாற்றினர் :

திரு. இலக்குமிரதன் பாரதி, பேராசிரியர், சரவண ஆறுமுக முதலியார், புலவர் நன்னன், பேராசிரியர் அனுமந்த், பன் மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார், திரு. கிருட்டிணசாமி பாரதி, டாக்டர் வி. மீ. ஞானப்பிரகாசம், பேராசிரியர் ரா. சீனிவாசன், திரு. சோமலெ.


நாள்தோறும் நூற்றுக்கணக்கான தமிழ் அன்பர்களும், அறிஞர்களும் கருத்தரங்கிற்கு வருகை புரிந்தனர். ஒவ்வொரு நாளும் கருத்தரங்கக் கட்டுரையை ஒட்டி, அறிஞர் சிலர் கருத்துரை வழங்கியதோடு, பல வினாக்களும் வந்திருந்தோரால் எழுப்பப்பட்டன. இவற்றோடு சென்னைப் பல்கலைக்கழகத்தினர் நாள்தோறும் ஒரு வினாப் பட்டியலைத் தயாரித்து, அவையில் கட்டுரையாளரிடம் வழங்கியது கருத்தரங்கின் சிறப்புப் பகுதி களுள் ஒன்றாகும். முதன் முதலாகச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை நடத்திய இப்பத்து நாள் கருத்தரங்கு, நாட்டு மக்களின் கருத்தைக் கவர்ந்தது; மேலும் ஆராய்ச்சிக் கருத்துக்களை அறிந்து கொள்ளும் ஆர்வத்தை மக்களிடத்துத் தூண்டியுள்ளமை இங்குச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

———


# சென்னைப் பல்கலைக் கழகப்
# 'பல்கலைப் பழந்தமிழ்' கருத்தரங்கு



டாக்டர் வ. செ. குழந்தைசாமி அவர்கள்
சொற்பொழிவு நிகழ்த்துகிறார்.



திரு. மா. சண்முகசுப்பிரமணியம் அவர்கள்
ஆய்வுரை ஆற்றுதல்



தமிழகக் கல்வி அமைச்சர், நாவலர்
மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.
அவர்கட்கு 23-1-72 இல் மதுரைப் பல்கலைக்கழகம்
டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது

# டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் வாழ்க!

மதுரை மாநகரம் விழாக்கோலம் பூணத், தமிழ் மாநில ஆளுநரும் பல்கலைக் கழக வேந்தருமாகிய மாண்புமிகு கே. கே. ஷா அவர்கள் தலைமைதாங்க, மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த—தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு நாவலர் நெடுஞ்செழியன் அவர்கட்கு மதுரைப் பல்கலைக் கழகம் 23-1-72ல் டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் கருணாநிதி, மின்துறை அமைச்சர் ஓ. பி. இராமன், போக்குவரத்து அமைச்சர் எஸ். இராமச்சந்திரன், மதுரை மேயர் எஸ். முத்து, சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் சுந்தர வடிவேலு மற்றும் இந்திய நாடாளுமன்ற, தமிழகச் சட்டமன்ற, மாநகராட்சிமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் விழாவில் கலந்துகொண்டனர்.

ஆளுநர் ஷா அவர்கள் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கட்கு டாக்டர் பட்டத்தினையும் அதற்கான சான்றிதழையும் அளித்தார். டாக்டர் பட்டம் பெற்ற நாவலர் அவர்களைப் பாராட்டி ஆளுநர் அவர்களும் டாக்டர் மு. வ. அவர்களும், மற்றுமுள்ள அறிஞர்களும் உரையாற்றினர்.

டாக்டர் கலைஞர் அவர்கள் பேசியபோது, "ஒரே நெறியுடன் நேர்மைக் குணத்துடன், ஒரே குறிக்கோளுடன் பணியாற்றி வருபவர்களில் தலைசிறந்தவர் என்னுடைய உடன்பிறப்பு—நடமாடும் பல்கலைக் கழகமாம் எங்கள் நாவலர் அவர்கள் இன்று பெறுகின்ற இந்தப் பெருமை நான் பெறுகின்ற பெருமை போல—நம் நாட்டு மக்கள் அனைவரும் பெறுகின்ற பெருமை போல—தமிழாய்ந்த உள்ளங்களெல்லாம் பெறுகின்ற பெருமைபோல என்று சொன்னால் அது மிகையாகாது" என்று குறிப்பிட்டார்.

முத்தமிழ் வளர்த்த பாண்டி நாட்டின் தலைநகராம் மதுரை மாநகரில் நாவலரவர்கட்கு டாக்டர் பட்டம் வழங்கப் பெற்றது சாலப் பொருத்தமுடைத்தாகும். அவர் தம் தோற்றம், கல்வி, பதவி, பண்பு நலன், தமிழ்மொழியிடம் அவர்கள் கொண்டிருக்கும் அளவிறந்த பற்று, கொள்கை, பெயர்ச்சிறப்பு ஆகிய இத்தனையும் அவருக்கு மதுரைப்

பல்கலைக் கழகம் அளித்த டாக்டர் பட்டம் பல்லாற்றானும் பொருத்தமே எனச் சான்று புகல்வனவாகும்.

நம் கழகத்திடம் நாவலரவர்கட்குப் பற்று மிகுதி உண்டு. கழகத்தின் தமிழ்த் தொண்டினை யாண்டும் பரப்பிய பண்பாளர் அவர். எனவே அத்தகைய அறிஞர் டாக்டர் பட்டம் பெற்றமை குறித்து நாம் பெருமகிழ்ச்சியடைகிறோம். அவரை 'நடமாடும் பல்கலைக் கழகம்' என அழைத்தவர் அறிஞர் அண்ணா அவர்களாவார். அந்த அறிஞரின் வாக்கு இன்று நடைமுறையானமை கண்டு மகிழ்கிறோம்.

நாவலரவர்கள் பல்லாண்டுகள் நலமுடன் வாழ்ந்து நாட்டுக்கும் மொழிக்கும் மேலுந் தொண்டாற்றவேண்டும் என உளமார வாழ்த்துகின்றோம்.

---

## தாமரைச் செல்வர் ம. பொ. சி. வாழ்க!


தமிழரசுக் கழகத் தலைவரும், சிலம்புச் செல்வரும், பேச்சாற்றல் எழுத்தாற்றல் மிக்க பெருந்தகையாளருமான திரு ம. பொ சிவ ஞானம் அவர்களின் இலக்கிய அறிவாற்றல்களைப் பாராட்டிப் பெருமைப் படுத்து முகத்தான் இந்தியக் குடியரசு விழா நாளாகிய 1972 சனவரித் திங்கள் 26இல் குடியரசுத் தலைவர் அவர்கள் 'பத்ம ஸ்ரீ' (தாமரைச் செல்வர்) என்னும் பட்டத்தினை வழங்கியுள்ளார்.

திரு.ம.பொ.சி. அவர்கள் இந்திய அரசின் இத்தகைய பட்டத்தினைப் பெறப் பல்லாற்றானும் தகுதியுடையவராவர். இவர்தம் அரசியல் தொண்டு, மற்றையோரின் அரசியல் தொண்டை விடச் சாலச் சிறந்த தாகும். ஏனெனில் 'இந்திய தேசீயம்' பேசுவோர் பலர் தமிழ்நாடு—மொழி—இனம் என்ற பற்றுக்களை மறந்திடுதல் இயல்பாக இருந்து வரும் இந் நாட்டில் அத்தகைய முப்பற்றுங்கொண்ட மூதறிஞராகத் திகழ்கின்றார் ம. பொ. சி.; அத்தகையார்க்குக் கிடைத்த சிறப்பும் பெருமையும் தமிழகத்திற்குக் கிடைத்த சிறப்பும் பெருமையுமாகும்.

எனவே தக்காரைத் தேர்ந்தெடுத்துத் தக்கதொரு பட்டம் வழங்கிய இந்திய அரசினரைப் பாராட்டுகிறோம். சிலம்புச் செல்வர் தாமரைச் செல்வராகவும் ஆனமை குறித்து மகிழ்ந்து மனமார வாழ்த்துகிறோம். இவர்கள் சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக்குழுவிற்கும் ஓர் உறுப்பின ராகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற நற்செய்தியும் மகிழ்ச்சியூட்டுவதாகும். வாழ்க தமிழ்! வளர்க ம. பொ. சி யின் தமிழ்த்தொண்டு.

---

# திருவள்ளுவர் 2003 ஆம் ஆண்டு விழா




தமிழ்நாட்டு நல்வழி நிலையச் சார்பில் 16—1—'72 இல் திருவள்ளுவர் 2003 ஆம் ஆண்டுவிழா திருமயிலைக் கபாலீசுவர திருமண மண்டபத்தில் சிலம்புச் செல்வர் ம.பொ சி. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நெல்லை திரு. இராசானந்தம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர். மாண்புமிகு அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் விழாவினைத் துவக்கி வைத்துச் சிறப்புரையாற்றினர். முன்னாள் அமைச்சர் பக்தவச்சலம் அவர்கள் திருவள்ளுவர் படத்தினையும் ஔவை, தாமரைச் செல்வர் தி. க. சண்முகம் அவர்கள் வ உ.சி. அவர்கள் படத்தையும் திறந்துவைத்தார்கள். குருவாயூர் பொன்னம்மாள் தமிழிசை விருந்தளித்தார். மேயர் காமாட்சி ஜயராமன் அம்மையார் வாழ்த்துரை வழங்கினர். ஔவை சு. நடராஜன், வளனரசு, விசுவநாத ஐய்யர், கவிஞர் வெற்றியழகன், திருமதி சரோஜினி வரதப்பன், த. நாகராஜன் மற்றும் பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றினர்.

# பெருமழைப் புலவர்
# பொ. வே. சோமசுந்தரனாருக்கு அஞ்சலி

காலஞ் சென்ற பெருமழைப் புலவர் பொ. வே. சோமசுந்தரனார் அவர்கட்கு அஞ்சலி செலுத்து முகத்தான் அவர் தம் சொந்த ஊராகிய தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த மேலப் பெருமழை என்னும் சிற்றூரில் 18-1-72இல் ஒரு கூட்டம் நடைபெற்றது.

பெருமழை உயர் தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். அவர் பெருமழைப் புலவர் அவர்களின் இலக்கண இலக்கிய அறிவு, உரைத்திறன், தன்மான உணர்வு, உரிமை வாழ்க்கை ஆகியன பற்றி விரிவாகப் பேசினார்.

அடுத்துச் சென்னைத் திருப்பவுல் உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியரும். பொ. வே. சோ. அவர்களின் நெருங்கிய நண்பருமான புலவர் திரு. சா. சுந்தரனார் அவர்கள், பெருமழைப் புலவரின் நுண்மாண் நுழைபுல அறிவு எளிய வாழ்க்கை முறை ஆகியன பற்றியும், தமக்கும் அவருக்கு மிடையே யிருந்த நட்பினைப் பற்றியும் இருவரும் நிகழ்த்திய நீண்ட உரையாடல்களின் சிறப்புப் பற்றியும், விரிவாகப் பேசினார். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்துடன் தொடர்பு கொண்டு பெரும்பான்மையான சங்க இலக்கியங்களுக்கு அரிய உரைகள் இயற்றிய பெருமழைப் புலவரின் உரைத்திறன் பற்றிக் கூறுகையில் அவர்களை நச்சினார்க்கினியரோடு ஒப்பிட்டும் அவர்தம் உரை நூல்களைத் தமிழர்கள் படித்துச் சுவைத்தல் வேண்டு மெனவும் அவருக்குச் சிலை யமைத்தல் வேண்டு மெனவும் கூறினார்.

பின்னர்க் கழக ஆட்சியாளர் அவர்கள் தமக்கு உடல்நலமின்மை காரணமாகக் கூட்டத்திற்கு வர இயலாமை குறித்தும் புலவரவர்களின் மறைவுக்கு இரங்கியும் எழுதியிருந்த கடிதம் கூட்டத்தில் படிக்கப் பட்டது. அடுத்து மேலப்பெருமழை ஊர் ஒன்றியத் தலைவர், புலவரின் மாண்புகள் பற்றிப் பேசினார். இறுதியில் பெருமழைப் புலவரின் திருமகனார் சோ. பசுபதி நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது.

---

## திரு. தி. நா. சுப்பிரமணியம் மறைவு

தமிழகக் கல்வெட்டாராய்ச்சியாளர்களுள் ஒருவரும், கல்வெட்டு எழுத்துக்கள் பற்றிய விளக்க அகராதியினைப் "பண்டைத் தமிழ் எழுத்துக்கள்" என்ற தலைப்பில் எழுதி கல்வெட்டாராய்ச்சிக்குத் துணைபுரிந்தவரும் ஆகிய திரு. தி. நா. சுப்பிரமணியம் அவர்கள் கடந்த 30-1-72இல் தமது 68ஆம் அகவையில் சென்னையில் தமதில்லத்தில் காலமானார்கள் என்ற செய்தியறிந்து வருந்துகிறோம். திரு சுப்பிரமணியம் அவர்கள் வட்டெழுத்துக்களை ஆய்ந்து எழுதுவதில் மிக்க திறன் படைத்தவர். இவர் தம் மறைவு தமிழ்க் கல்வெட்டுத் துறையாராய்ச்சி யுலகிற்குப் பேரிழப்பேயாகும். மறைந்த சுப்பிரமணியம் அவர்களின் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

# செய்திகளும் குறிப்புக்களும்

## முஜிபுர் ரகுமானின் மொழிப்பற்று

"வங்க மொழியை—வங்காளக் கலாச்சாரத்தை ஏற்றுக் கொள்பவர்கள்தாம் இங்கு இருக்கலாம். அவற்றை ஏற்க விரும்பாதவர்கட்கு வங்கத்தில் இடமில்லை. அவர்கள் தாராளமாக வெளியேறிவிடலாம்"

என்று வங்க தேசத் தலைமை அமைச்சராகப் பதவி யேற்றகாலைச் செய்தியாளர்களிடையே பேசும்போது முஜிபுர் ரகுமான் குறிப்பிட்டார்.

திரு. முஜிபுர் ரகுமானின் மொழிப்பற்றுக்கும் நாட்டுப் பற்றுக்கும் இப்பேச்சு நல்லதோர் எடுத்துக் காட்டாகும். இங்குத் தமிழகத்தில் நாம் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்கிறோம். அங்ஙனம் இருந்தும் நாம் கூறும் மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் தமிழ்ப் பகைஞர்களால் இழித்தும் பழித்தும் பேசப்படுகின்றன. என்னே விந்தை!

## இந்தி வெறியர்க்கு டாக்டர் தரும் நல்ல மருந்து!

"இந்தி பேசும் மக்கள் நாட்டில் உள்ள மற்ற மொழிகட்கும் அவற்றிற்குரிய மதிப்பை அளிக்க வேண்டும். இதன் மூலம் இந்தி மொழி பேசப்படும் பகுதியைச் சேர்ந்த மக்களுக்கும் மற்ற மொழி பேசும் பகுதியைச்சேர்ந்த மக்களுக்குமிடையே இணைப்பு ஏற்படுத்தி உதவ முன்வர வேண்டும். இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டுள்ளோர் 'இந்திதான் நாட்டின் தேசிய மொழியாயிற்றே! அதனால் நமக்குத் தனிச் செல்வாக்கு உண்டு' என்று கருதிவிடக் கூடாது"

என்று 23-1-72இல் அலகாபாத்தில் இந்தி விசுவ வித்தியாலயாவின் பட்ட மளிப்பு விழாவில் பேசிய நடுவணரசின் சுற்றுலாத்துறை அமைச்சர் டாக்டர் கரண்சிங் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இஃது இந்தி வெறியர்கட்கும், இந்தியினையே சிறப்பாக எண்ணும் அரசியல்வாதிகட்கும் சரியான எச்சரிக்கையாகும். அது மட்டு மன்று, டாக்டர் அவர்களின் பேச்சு இந்தி வெறிக்கு நல்ல மருந்துமாகும்!

## உலக சமக்கிருத மாநாடு!

சீரிளமை குன்றாத செந்தமிழ்க்கு முறையே மலேயா, சென்னை, பிரான்ஸ் ஆகிய இடங்களில் உலக மாநாடுகள் நடந்தனவல்லவா? அதுபோல் ஆரிய மொழியாகிய சமக்கிருதத்திற்கும் உலக மாநாடு நடைபெறப் போகிறதாம்! இதனை இந்திய நடுவணரசின் கல்வி, சமுதாயநல அமைச்சவைகள் முன்னின்று நடத்த முனைந்துள்ளன. மார்ச்சுத் திங்கள் 27 முதல் 31 முடிய 5 நாட்கள் நடத்த ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. யுனெஸ்கோ (unesco)வின் ஒத்துழைப்புடன் இம் மாநாடு நடைபெறும் என்றும் அறியப்படுகிறது

## வடமொழி 'அருச்சனை'யை எதிர்த்துப் போராட்டம்!

"தமிழ் நாட்டிலுள்ள திருக்கோவில்களில் தமிழ் அருச்சனைத் திட்டம் வெற்றி நடை போடுவது கண்டு வேதனைப் பட்டுச் சிலர் எதிர்ப்புத் தெரிவித்தும் பேசியும் எழுதியும் வருகின்றனர். இந்த எதிர்ப்புக்கு.எதிர்ப்புத் தெரிவிக்கவும், தமிழ் அருச்சனைத் திட்டத்தை மேலும் விரைவு படுத்தவும், அனைத்துக் கோவில்களிலும் வடமொழி அருச்சனை நடைபெறுவதைத் தடை செய்யுமாறு கோரிப் போராட்டம் நடத்தவும் திட்டமிட்டிருப்பதாகத் தமிழ் நாடு இந்து அறநிலையக் காவலர்கள் சங்கப் பொதுச் செயலாளர் திரு. எஸ். சூரியநாராயணன் அவர்கள் 2-2-72இல் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார். இது தொடர்பாக மார்ச்சுத் திங்களில் திருவரங்கத்தில் ஒரு மாநாடு நடைபெறும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

தமிழ் நாட்டில் தமிழ் அருச்சனைக்கு எதிர்ப்பு இருக்கும்போது வடமொழி அருச்சனைக்கு எதிர்ப்பு எழுவதில் வியப்பில்லை.

## பொறியியற் பேரறிஞர் பா. வே. மாணிக்க நாய்க்கர் அவர்களின் நூற்றாண்டு விழா

1871ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 25ஆம் நாள் சேலம் பாகற் பட்டியிலே பிறந்த உயர்திரு பா. வே மாணிக்க நாய்க்கர் அவர்கள் மேற்பார்வைப் பொறிய (Superintending Engineer) ராகத் தனிப் பெருமதிப்புடன் பணியாற்றி 1931 திசம்பரில் இறையடி சேர்ந்தார்கள். அவர்கள் தமிழையும் சமயத்தையும் இருகண்ணெனப் போற்றிப் பழந் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் பிற்கால இலக்கியங்களையும் திருந்தக் கற்றூர்கள் செய்யுள் இயற்றும் புலமையும் பெற்றிருந்தனர். யாழ், வீணை, நீர்க் கோப்பை (சலதரங்கம்) மிழற்றுவதிலும், நீரிலே மணிக் கணக்கில் மிதப்பதிலும், தையல் வேலையிலும் வல்லமை யுடையவர். உலக மொழிகளை யெல்லாம் ஆய்தத்தை வேண்டுமிடங்களிற் பெய்து தமிழ் எழுத்துக்களைக் கொண்டே எழுதி ஒலிக்கலாம் என்பதை விளக்கப் படங்கள் எழுதி ஒலித்துக் காட்டிய மொழிப் பேரறிஞராவர். அவர்கள் எழுதிய காரைக்கட்டு வேலை பற்றிய கணிதவரைக் கட்டம் (Calculograph) என்ற நூலை மேனாட்டுப் பொறித்துறை வல்லுநர்கள் பெரிதும் பாராட்டியுள்ளனர் கையெழுத்துப் படியிலுள்ள இந்நூல் அச்சிடப் பெறவில்லை. கழகம் அமைத்து வருகின்ற நூற்காட்சியிலே அஃது இடம் பெறுகின்றது. தமிழக வரலாற்றிலே சிறப்பிடம் பெற வேண்டுபவர் களில் இவர்களும் ஒருவராவர் என்பதைத் தமிழ்மக்கள் நன்கு உணர்தல் வேண்டும்.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் திரு ந. சஞ்சீவி யவர்கள் மறைந்த மாப்பேரறிஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவைத் தமிழக மெங்கும் மிகவுஞ் சிறப்பாகக் கொண்டாடுதல் வேண்டுமென்று கருதி அதன்படி 11-12-1971 இல் சென்னைக் கிறித்தவ இளைஞர் கழக (ஒய். எம். சி. ஏ) ப் பட்டி மன்றத்திலே கொண்டாடி னார்கள். திருச்சி முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் சிறப்புரையாற்றினார்கள்.

அடுத்து 18-12-1971 இல் தமிழ்க்கலை மன்றத்தின் சார்பில் சென்னை மாவட்ட நடுவண் நூலகக் கட்டடத்திலே தொழில் நுட்பக் கல்வித்துறை இயக்குநர் உயர்திரு பி. சிவலிங்கம் (பி இ) அவர்கள் தலைமையில் தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை திரு. நாய்க்கரவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துத் தாம் எழுதியுள்ள கட்டுரையைப் படித்து இடையிடையே சிற்சில விளக்கங்களைக் கூறினர். பின்னர்த் திரு. நாரண துரைக்கண்ணனவர்கள் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

18-1-1972 இல் சேப்பாக்கம் தமிழ்நாடு பொறியாளர் பேரவையில் வள்ளல் நா. மகாலிங்கம் (எம்.ஐ.இ) அவர்கள் தலைமையில் டாக்டர் ந. சஞ்சீவியவர்களும், பொறியர்கள் மணவாளன், பொ. குமாரசாமி ஆகியோரும் சிறப்புரை யாற்றினார்கள்.

மூன்று விழாக்களிலும் கழகம் தொகுத்து வைத்திருக்கும் திரு நாய்க்கரவர்களின் நூல்கள், கட்டுரைகள், கடிதங்கள், கையெழுத்துப் படிகள் முதலியன காட்சியாக அமைக்கப் பெற்றிருந்தன. விழாவுக்குப் போந்த அறிஞர்களும் அன்பர்களும் காட்சியைக் கண்டு களிபேருவகை யடைந்தனர்.

## ஊர்ப் பெயர் மாற்றம்

தேவார காலத்தில் தூயதமிழில் வழங்கப்பெற்ற 'மறைக்காடு' என்ற திருவூர்ப் பெயர் 'வேதாரணியம்' என்று தமிழ்ப் பகைவர்களால் வடமொழியில் மாற்றப் பெறறு இந்நாள்காறும் வழங்கித் தமிழ் மக்கட்கு இழைத்த மாசினை இன்றைய தமிழகவரசு மறைக்காடு' என மாற்றியதை உளமார வரவேற்று வாழ்த்துகிறோம். அதேபோல் 'மாயூரத்'தை 'மயிலாடுதுறை' என்றும், 'விருத்தா சலத்தைப் 'பழமலை' என்றும், 'கும்பகோணத்'தைக் 'குடமூக்கு' என்றும், 'வைத்தீஸ்வரன் கோயிலை'ப் 'புள்ளிருக்கு வேளூர்' என்றும் மாற்றியமைக்கும்படி தமிழகவரசைப் பணிவன்புடன் வேண்டிக் கொள்ளுகிறோம்.

## மாநகரிலுள்ள வட்டப் பெயர் மாற்றம்

வள்ளலார் இராமலிங்க அடிகள் இளமையில் வாழ்ந்த ஏழுகிணற்று வட்டத்துக்கு 'வள்ளலார் நகர்' எனப் பெயர் சூட்டுமாறு அன்பர் சிலர் வேண்டியதை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் டாக்டர் மு. கருணாநிதி அவர்கள் ஏற்று உடனே மாநகரவையினர்வழி 'வள்ளலார் நகர்' என மாற்றியமைக்கச் செய்தமையினை வரவேற்றுப் பாராட்டுகிறோம்.

அதேபோல் குலப் பெயரிலுள்ள வண்ணாரப்பேட்டை, குயப்பேட்டை ஆகிய வட்டங்கட்கும், காலாடிப் பேட்டை, கிருஷ்ணாம்பேட்டை, புதுப் பேட்டை ஆகிய வட்டங்கட்கும், அயனாவரம், மண்ணடி, பேசின்பிரிட்ஜ் போன்ற வட்டங்கட்கும் தமிழ்ப் பெருமக்கள் சிலர் பெயர்களை அமைக்க வேண்டுவது மிகவும் பொருத்தமாகும். அவ்வாறே பொருத்தமற்ற தெருப் பெயர்களையும் மாற்றியமைப்பதும் வேண்டற்பாலதாகும்.

---

# மதிப்புரை

## அரியணையில் அழகு தமிழ்

[ஆசிரியர் : கோ. முத்துப் பிள்ளை, பி. ஏ., கிடைக்குமிடம் : சை. சி. நூற்பதிப்புக் கழகம், 1/140, பிராட்வே, சென்னை-1. விலை. ரூ 1-50]

எங்கும் எதிலும் தமிழ் ஆட்சிபுரியும் இந்நாளில் அழகு தமிழை அரியணையில் அமர்த்தி மேலும் அழகு படுத்த என்னென்ன செய்ய வேண்டும், மொழி பெயர்ப்புக்களில் எத்தகைய குறைபாடுகள் உள, அவற்றைக் களைவது எங்ஙனம் என்பனவற்றைப் பத்துத் தலைப்புக்களில் அழகுற, நகைச்சுவை ததும்ப விளக்குகிறார் இந் நூலாசிரியர். ஆட்சித் துறையில் தமிழ் வீறுகொண்டு விளங்குதற்கு இந்நூல்வழிச் சிறந்த கருத்துக்களை அத்துறையிலே சில ஆண்டுகள் தொண்டுசெய்த இதன் ஆசிரியர் வழங்கி யிருப்பதைப் பெரிதும் பாராட்டுகிறோம். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி, கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ் செழியன் ஆகியோரின் அணிந்துரைகளுடன் கூடிய பயனுள்ள நூல்.

## காதல் காவியம்

[ஆசிரியர் : கவிஞர் இ. சு. முத்துசாமி, M.A., B.T. பதிப்பாளர். வான்மயில் பதிப்பகம். கிடைக்குமிடம் : பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1, விலை ரூ 2-50]

காதல் காவியம் என்னும் இக்கவிதைநூலில் காதலைப்பற்றி மட்டு மன்றி இயற்கையின் எழிலையும் பலவகை யாப்புக்களில் அழகுற அமைத் துள்ளார் ஆசிரியரவர்கள். கற்பனைவளம், நடையழகு, யாப்பொழுங்கு ஆகியன நன்கு அமைந்துள்ள கவிதை இலக்கியமாகத் திகழ்கின்றது. டாக்டர் மு வ., கா. அப்பாத்துரையார், நாமக்கல் கவிஞர் ஆகியோரின் பாராட்டுதல்களைப் பெற்றிருப்பது இந்நூலின் சிறப்புக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

## கம்பர்


[ஆசிரியர்: டாக்டர் வ. சுப. மாணிக்கம் ; பதிப்பாளர் : மணிவாசகர் நூலகம், சிதம்பரம், விலை ரூ 4-00]

இந்நூல், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 1964 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் முறையே 21, 22, 23 ஆம் நாட்களில் டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் 'கம்பர்' என்ற தலைப்பில் ஆற்றிய சொற் பொழிவின் தொகுப்பாகும். பொருள் கம்பரைப் பற்றியதாயினும் இந்நூல் காப்பிய இலக்கியம் பற்றியதொரு திறனாய்வு எனவே சொல்ல வேண்டும். இது தமிழ் ஆராய்ச்சியாளர்க்குப் பெரிதும் பயன்படும் சிறந்த நூலாகும்.


---

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே, அப்பர் அச்சகத்தில்
திரு வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : வ சுப்பையா.

# டாக்டர் நாவலருக்குப் பாராட்டு விழா:
# நூற்பேழை அன்பளிப்பு



கழக நூற் பேழையினை அன்பளிப்பாகப் பெற்ற டாக்டர் நாவலர் அவர்களும்; அன்பளிப்பு வழங்கிய சென்னை மாநகர்த் தமிழாசிரியர் கழகப் பொறுப்பாளர்களும்.



பழந்தமிழ் நூல்கள் அடங்கிய பேழையின் திறவுகோலைக் கந்தசாமிக் கல்லூரி முதல்வர். திரு. ம. கி. தசரதன் அவர்கள் மாண்புமிகு நாவலரிடம் அளித்தல்.